விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# வலம்புரி

*Valampurii*

ராம்கோ
RAMCO CEMENT
MADRAS CEMENTS LTD
சீமெந்து

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 15 வியாழக்கிழமை (28.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 130

# ரயில் - பஸ் அகோர விபத்து 35 பேர் பலி; 60 பேர் காயம்

## கொழும்பு பொகவந்தலாவலவில் நேற்றுப் பயங்கரம்

(நமது நிருபர்)



கொழும்பிலிருந்து 80கிலோமீற்றர் தொலைவிலுள்ள பொகவந்தலாவல பகுதியில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் பஸ் ஒன்றை ரயில் மோதிய கோரவிபத்தில் 35 பேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர். 60 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில், குருநாகல் வைத்தியசாலை மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலை என்பவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து கண்டிநோக்கிச் சென்றுகொண்டிருந்த கடுகதி ரயில், தம்புள்ளவிலிருந்து கொழும்புநோக்கி வந்துகொண்டிருந்த பஸ்ஸினை மோதியதாலே இவ்விபத்து ஏற்பட்டது.

கண்டி தலதா மாளிகைக்கு பக்தர்களை ஏற்றிக்கொண்டுசென்று திரும்பிக்கொண்டிருந்த பஸ், அலவா ரயில்கடவையைக் கடக்கமுற்பட்ட சமயம் இக்கோரவிபத்து ஏற்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட பஸ் ரயில்கடவையை அண்மித்தவேளை இரண்டுபக்கக் கடவைகளும் மூடியிருந்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பு உருவானால் வழக்குத் தாக்கல் செய்யப்படும்

## தேசிய பிக்குகள் முன்னணி எச்சரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக தேசிய பிக்குகள் முன்னணி எச்சரித்துள்ளது.

தால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படலாமென 143 ஆவது சரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக முன்னணி சுட்டிக் காட்டியுள்ளது.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த

தம் ஒன்றினை செய்துகொள்வதற்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அமைப்பு ஒன்றுக்கு அதிகாரமில்லை எனத் தெரிவித்தார். இந்தவிடயம் தொடர்பாக தாம் தற்சமயம் சட்டவிளக்கங்களைப் பெற்று வருவதாகவும்,

## மட்டக்களப்பில் நேற்று சூடு றிசேவ் கான்ஸ்டபிள் பலி

மட்டக்களப்பு செங்கலடியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ரிசேவ் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார். கொல்லப்பட்ட ரிசேவ் பொலிஸ் கான்ஸ்டபிள், ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றும் செல்டன் நவரட்ண (வயது 33) என்பவர் எனத் தெரியவந்துள்ளது.

செங்கலடி கடைத்தெருப் பகுதியில் வழமைபோல் சிவில் உடையில் நின்றுகொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர்மீது துப்பாக்கிப் பிர

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் அதற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக தேசிய பிக்குகள் முன்னணி எச்சரித்துள்ளது.

அரசியலமைப்பின் 143 ஆவது சரத்தின் படி இவ்வழக்கினை தாம் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்போவதாக தேசிய பிக்கு முன்னணி கூறியுள்ளது.

நாட்டுக்கு பாதகம் ஏற்படும் எனக் கருதும் விடயம் மேற்கொள்ளப்படுமாகவிருந்தால் அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படலாமென 143 ஆவது சரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக முன்னணி சுட்டிக் காட்டியுள்ளது.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த தேசிய பிக்குமுன்னணியின் அமைப்பாளர் ஹெலவல்கல சந்தாலோக தேரர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துரைக்கையில்,

தடைசெய்யப்பட்டுள்ள இயக்கமான விடுதலைப் புலிகளுடன் இவ்வாறான ஒப்பந்தம் ஒன்றினை செய்துகொள்வதற்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அமைப்பு ஒன்றுக்கு அதிகாரமில்லை எனத் தெரிவித்தார். இந்தவிடயம் தொடர்பாக தாம் தற்சமயம் சட்டவிளக்கங்களைப் பெற்று வருவதாகவும்,

அஸ்கிரிய, மற்றும் மல்வத்த மகாநாயக்கர்களையும், ஜே.வி.பியினரையும் சந்தித்து இது தொடர்பாக கருத்துக்களைப் பெறவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவர்களின் கருத்துக்கள் சாதகமாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

செல்டன் நவரட்ண (வயது 33) என்பவர் எனத் தெரியவந்துள்ளது.

செங்கலடி கடைத்தெருப் பகுதியில் வழமைபோல் சிவில் உடையில் நின்று கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச்சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். தன்னை இலக்குவைத்த நபர்கள்மீது இவர் தனது துப்பாக்கிமூலம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், எனினும் அது பலனளிக்கவில்லையென பொலிஸார் கூறினர். (இ-04)

# கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு கல்கிஸை பொலிஸ் புலனாய்வுத்துறை அதிகாரி ஜெயரட்ணம் கடத்திச் செல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொள்ளுப்பிட்டியிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமை அலுவலகத்திற்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

புலனாய்வுப்பிரிவு அதிகாரிகளை பாதுகாக்கும் தேசிய மனித பாதுகாப்பு அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

கடத்தப்பட்ட அதிகாரியை கண்டுபிடித்து ஒப்படைக்குமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கண்காணிப்புக்குழுவை கோரியுள்ளனர்.

இதேவேளை புலனாய்வு அதிகாரி கடத்தப்பட்டமை தொடர்பாக அவரைக் கண்டுபிடிக்க சகல வழிகளிலும் தாம் முயற்சி செய்துவருவதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் உறுதியளித்துள்ளார். (ச-08)

# லண்டனில் குழு மோதல் இரு தமிழ் இளைஞர் காயம்

லண்டன் ரூட்டிங் பகுதியில் உதைபந்தாட்ட போட்டியில் பங்குகொண்ட இரு இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலின் இரண்டு தமிழ் இளைஞர்கள் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 25 ஆம் திகதி பிரித்தானியாவில் தங்கியிருப்பதற்கு உரிமை மறுக்கப்பட்ட 5 ஆயிரம் ஈழத்தமிழர்கள் பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் அலுவலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் இவ்வாறு ஒரு சில இளைஞர் வன்முறைகளில் ஈடுபடுவது ஒட்டுமொத்த தமிழினத்தையுமே பாதிக்கும் செயலாகும்.

இவ்வாறான வன்முறைகளில் ஈடுபடும் இளைஞர்களை இனங்கண்டு இவர்களின் வன்முறைகளை கட்டுபடுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தமிழ் மக்கள் அனைவரும் முன்வரவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

EXPOAIR
your friend in the skies...

யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290, 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும்

## அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின்

# 45 ஆவது ஆண்டு நிறைவும் சைவப்புலவர் பட்டமளிப்பும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவும், சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ந.சிவராசாவின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இவ்விழாவுக்கு சைவப்புலவர் மு.திரு ஞானசம்பந்தபிள்ளை தலைமை தாங்குவார்.

யாழ.பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சைவபரிபாலனசபைத் தலைவர் வ.கந்தசாமியின் தொடக்கவுரையை அடுத்து நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அருளாசியுரை வழங்குவார்.

பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரின் பட்டமளிப்பு உரையைத் தொடர்ந்து, 2004 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைகளில் சித்தியடைந்தோருக்கான பட்டமளிப்பு வைபவம் இடம் பெறும்.

தொடர்ந்து பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட புராணபடனப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும்.

**சைவப்புலவர் பட்டம் பெறுவோர் - 2004**

சுவாமிநாதபிள்ளை தேவமனோகரன் - (இணுவில்), செல்வி சசிலேகா கனகசுந்தரம்பிள்ளை - (அச்சுவேலி), குஞ்சிதபாதம் சுரேஸ்குமார் - (நல்லூர்), குமாரசுவாமி சுமுகலிங்கம்- (சாவகச்சேரி), துரைராசசிங்கம் சடாட்சரசிங்கம் - (கிளிநொச்சி),

**இளஞ்சைவப்புலவர் பட்டம் பெறுவோர் - 2004**

துரைசிங்கம் குமரநாதன் - (கொடிகாமம்), செல்வி சுகாசினி கிருஷ்ணபிள்ளை - (சாவகச்சேரி), கந்தையா சுகதீஸ் -(சண்டிலிப்பாய்), வைத்திலிங்கம் இரகுநாதமுதலியார் - (யாழ்ப்பாணம்), செல்வி குமுதினி சரவணமுத்து - (வரணி), தவராசா குமரன் - (சுன்னாகம்), செல்வி புஸ்பலதா இராமலிங்கம் - (கிளிநொச்சி), செல்வி சந்திரிகா இராமநாதன் - (வவுனியா), செல்வி வசந்தி நமசிவாயம் - (வவுனியா), வீரபாகு ஐங்கரன் - (வவுனியா), செல்வி இராசேந்திரமலர் இராசையா- (வவுனியா), செல்வி [illegible] யோகேஸ்வரன் - (வவுனியா), செல்வி பவளமலர் ஜேசுதாசன் - ([illegible]), செல்வி ஆனந்தரூபி ஆனந்தராஜா - (மன்னார்), எதிர்மன்னசிங்கம் ஜெயரஞ்சித் - (புதுக்குடியிருப்பு).

**புராணபடனப் போட்டியில் பரிசு பெறுவோர் - 2005**

**ஆண்கள் பிரிவு:-**

**1 ஆம் பரிசு :-** இராசையா தனுஷன் - மீசாலை வீரசிங்கம் ம.வித், விநாயகமூர்த்தி ரதிகரன் - மீசாலை வீரசிங்கம் ம.வித்.

**2 ஆம் பரிசு :-** லோகநாதன் ரஜீவன் - இணுவில் இந்துக் கல்லூரி, சிவபாதம் சிவதர்சன் - இணுவில் இந்துக் கல்லூரி.

**3 ஆம் பரிசு :-** இராஜசூரியர் ஜதீசன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, யோகநாதன் மாதவன் - கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பெண்கள் பிரிவு**

**1 ஆம் பரிசு :-** லக்சுமி எதிர்குலசிங்கம், கிருசாந்தி கந்தவனம் - வேலணை சேர்வைத்தியலிங்கம் துரைசாமி ம.ம.வித்தி.

**2 ஆம் பரிசு :-** இரஜந்தாரணி விவேகானந்தா - இணுவில் இந்துக் கல்லூரி, தர்சினி நவரத்தினம்- இணுவில் இந்துக் கல்லூரி,

**3 ஆம் பரிசு :-**மிதுர்ஷா கிருஷ்ணதாசன் ஜீவிதா செல்லத்துரை கிருஷ்ணசர்மா- பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை.

பட்டமளிப்பு, பரிசு வழங்கல்களைத் தொடர்ந்து சைவப்புலவர்களால் வழங்கப்படும் சிறப்புரை, மரபுக் கவிஞரங்கு, வில்லிசை, கலந்துரையாடல் திருமுறையோதல் ஆகியவை இடம்பெறும். (க-7)

## மூன்றரை வயதுக் குழந்தையை இனங்காண மே - 2இல் மீண்டும் மரபணுப் பரிசோதனை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் போது கடத்தப்பட்டு காணாமல் போனதாகக் கூறப்படும் மூன்றரை வயதுக் குழந்தையின் உண்மையான தாயாரை இனங்காணும் பொருட்டு மரபணுப் பரிசோதனை நடாத்துவதற்கு கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி மரபணுப் பரிசோதனை நடாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட குழந்தையின் தாயார் என உரிமைகோரும் பெண்ணையும் குறிப்பிட்ட குழந்தையையும் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

மரபணுப் பரிசோதனை நடாத்தி குழந்தையின் உண்மையான தாய் யார்? என்பதை நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு களனி பல்கலைக்கழகத்தின் றாகம வைத்திய பீடத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

டி.என்.ஏ பரிசோதனை அறிக்கையுடன் உரிமைகோருகின்ற சந்தேக நபர்களையும் ஜூன் மாதம் 28ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக்குமாறு சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சிறுவர் பாதுகாப்பு சபை விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலேயே, இவ் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி சுனாமிப் பேரலைகளினால் அடித்துச் செல்லப்பட்ட குறிப்பிட்ட குழந்தையை படையினர் மீட்டிருந்தனர்.

இந்தக் குழந்தையின் தாயார் என உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்கிய பெண்ணொருவர் குழந்தையை பெற்றுக் கொண்டதாக சிறுவர் பாதுகாப்பு சபையின் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. (ற-8)

## மேதின நிகழ்வை எழுச்சியுடன் கொண்டாட மன்னாரில் ஏற்பாடு

(மன்னார்)

தேசத்தின் விடுதலைக்கு அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் மேதின நிகழ்வை அனுஷ்டிப்பது என்று மன்னார் அனைத்து தொழிற் சங்கங்களின் இணையம் தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் வெகுஜண அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் சிந்தாத்துரை தலைமையில் இது தொடர்பிலான கூட்டம் நடைபெற்றது.

இதில் மன்னார் அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் க.முடியரசன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் மரியநாயகம் குரூஸ், தொழிற்சங்கங்களின் இணையப் பொறுப்பாளர் செ.ஈழப்பிரியன் ஏனைய துறைப்பொறுப்பாளர்கள், வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன், விநோதரலிங்கம் மற்றும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மாவட்ட பொறுப்பாளர் குமரேசன் உட்பட பொது அமைப்புக்கள் இணையங்கள், அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் என சுமார் முந்நூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, எமது தேசத்தின் விடுதலைக்காக ஒவ்வொருவரும் உழைத்தல், எமது அடுத்த சந்ததிக்கு போராட்டத்தை விட்டுச் செல்லாமல் ஒவ்வொருவரும் இவ் விடுதலைக்கான பங்களிப்பை நல்குதல் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு எதிராக மக்கள் சக்தியை அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்துதல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் மீதும், தொழிலாளர்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டுவரும் அரசின் அடக்கு முறைகளுக்கெதிராகவும், புறக்கணிப்புக்கெதிராகவும் ஒன்றுபட்டு மேதினத்தில் அணிதிரண்டு எமது உரிமையை வெல்வோம் எனவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (ற-4)

## இராசி பலன்

**28.04.2005**
**(சித்திரை 15 , வியாழக்கிழமை)**
**சதுர்த்தி முற்பகல் 10.00 மணிவரை**
**கேட்டை காலை 6.25 மணிவரை**
**மூலம் பின்னிரவு 5.00 மணிவரை**
**இராகுகாலம் 1.28 - 2.58 மணிவரை**
**சுபநேரம் 7.28-8.58 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | உஷ்ண நிலை, புதியதிட்டமிடல், பிரயாணம், எதிர்பாராத செலவு. |
| இடபம் | உறவினர் வெறுப்பு, முழக்கால்வலி, காரிய தடங்கல், திடீர் நன்மை. |
| மிதுனம் | மனோ தைரியம், இஷ்ட சித்தி, போசன நன்மை, நல்ல வரவேற்பு. |
| கடகம் | ஆரோக்கியம், மனமகிழ்ச்சி, தடைப்பட்ட காரியம் கைகூடும், சுபசெய்தி. |
| சிங்கம் | அஜீரண ரோகம், காரிய இடையுறு, தாழ்ந்த சுபாவம், வாக்கு மேன்மை. |
| கன்னி | புதிய விடயம், காரியதாமதம், பெரியோர் வெறுப்பு, கற்பனை மிகுதி. |
| துலாம் | மனோ தைரியம், கூட்டு முயற்சி, சுப நிகழ்வு, உறவினர் வருகை. |
| விருச்சிகம் | போசன சுகக் குறைவு, மனோ சங்கடம், ரோக நிலை, விவாதம். |
| தனுசு | ஆழ்ந்த சிந்தை, வெகுமானம், மாதர் நட்பு, தொழில் முயற்சி. |
| மகரம் | சோம்பல் நிலை, தன விரயம், பிரயாணம், உறவினர் மனஸ்தாபம், |
| கும்பம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், பெருமையடைதல், தனதானிய சேர்க்கை, அதிகாரிகள் ஒத்தாசை. |
| மீனம் | அதிகாரம், பிறருக்கு உதவி செய்தல், சுப நிகழ்வு, முயற்சி கைகூடும். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

*-வளவன்*

## வியாபாரிகள் பகிஷ்கரிப்பு

தமது வியாபாரப் பொருட்களை கால் நடைகள் சாப்பிட்டு நஷ்டத்தை ஏற்படுத்துவதைக் கண்டித்து, பருத்தித்துறை நகர சந்தை வியாபாரிகள் வியாபார பகிஷ்கரிப்பல் ஈடுபட்டனர்.

அத்துடன கால்நடைகளால் சந்தை அசுத்தப்படுவதையும் ஒழுங்கான முறையில் சந்தைதுப்பரவு செய்யப்படாததையும் எதிர்த்து கடந்த 25 ஆம் திகதி பருத்தித்துறை நகர் சந்தையில் வியாபாரம் செய்வோர் தமது வியாபாரத்தை நிறுத்தி பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனால் மரக்கறி வாங்க வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (க-7-104)

## நூல் வெளியீட்டு விழா

(அளவெட்டி)

அளவையூர் பண்டிதர் க.நாகலிங்கத்தின் செந்தமிழ் இலக்கண விளக்கத்தின் மூன்றாம் பாகமான "அகத்திணையியலும் புறத்திணையியலும்" எனும் நூல் வெளியீட்டுவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அளவெட்டி மஹாஜன சபை வாசிகசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவிற்கு கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைமை தாங்குவார். விருந்தினர்களாக இணுவில், அரசினர் வைதத்தியசாலை வைத்திய கலாநிதி வை.யோகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, விகடகவி மு.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் வரவேற்புரையை மஹாஜனசபை செயலாளர் நிகழ்த்துவார்.

அருட்கவி சி.விநாசித்தம்பி, முதுபெரும் புலவர், வை.க. சிற்றம்பலம் ஆகியோர் ஆசியுரையை வழங்குவார்கள்.

பாராட்டுரைகளை 'செஞ்சொற் செல்வர்' ஆறுதிருமுருகன், வைத்திய கலாநிதி வை.யோகேஸ்வரன், மாவை சேனாதிராசா, சி.சிவமகாராசா ஆகியோர் வழங்குவர்.

நூல் வெளியீட்டுரையை முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கவிஞர் சோ.பத்மநாதன் வழங்குவார்.

நயப்புரையை கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு, பா.மகாலிங்கசிவம், முன்னாள் கிராம சேவையாளர் பண்டிதர் இரா.சுப்பிரமணயம், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த துறை பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ், சைவப புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நூலாசிரியரின் ஏற்புரையை தொடர்ந்து அளவெட்டி மஹாஜனசபைத் தலைவர் வை.சுப்பிரமணியம் நன்றியுரையை வழங்குவார். (க-7)

## கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொக்குவில் பகுதியில் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களை இன்று சுகாதாரப்பிரிவினர் நஞ்சூட்டி அழிக்கவுள்ளனர். கொக்குவில் ஆடியபாதம் வீதி, காளிகோவில் வீதி, பொற்பதிவீதி, ஆகிய பகுதிகளில் உள்ள கட்டாக்காலி நாய்களே இவ்வாறு நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

எனவே, இப்பகுதியில் வசிப்பவர்கள் தமது வளர்ப்பு நாய்களை இன்று வெளியே விடவேண்டாம் என நல்லூர் பிரதேச சபையினர் கேட்டுள்ளனர். (க-252)

## அதிசய கோழி முட்டை

(மாத்தளை)

மாத்தளை தொம்பனவில் உள்ள கோழிப் பண்ணையொன்றில் 162 கிராம் நிறைகொண்ட பெரியளவிலான முட்டை ஒன்றை கோழி ஒன்று இட்டுள்ளது.

மூன்று மடங்கு எடையுள்ள அதிசய கோழிமுட்டை!



இம்முட்டை சாதாரண முட்டையைவிட மூன்று மடங்கு எடைகூடியது.

எம்.பசீல் என்பவரின் கோழிப் பண்ணையில் உள்ள கோழி ஒன்றே இவ்வதிசய முட்டையை இட்டுள்ளது.

படததில் முட்டையின் அளவை ஒப்பீட்டளவில் உணர்ந்து கொள்ள கைக்கடிகாரமொன்று அருகில் வைக்கப்பட்டுள்ளது.(க-7)

## விவாத அரங்கு - 8

**விடயம்**

**நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால்**

**எமது கலாசாரம்:**

- சீரழிந்துள்ளது.
- சீர்பெற்றுள்ளது.

**நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி**
**திரு.சி.சிவநேசன்**

**உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.**


அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

## (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 51



ஆயின் எவ்வாறாயினும் இதன் கண் குறித்துக் கூறப்பட்ட கால எல்லைக்குள் தெரிகுழு தனது முடிவெடுப்புக்களைப் பாராளுமன்றத்துக்கு அறிக்கையிட முடியாதிருந்தால் அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு அக்குழு குறிப்பிட்டுக் கூறப்படும் ஒரு எல்லை வரை மேலும் ஒரு கால நீடிப்புக்குப் பாராளுமன்றத்தின் அனு மதியைக் கோருதல் வேண்டும்.பாராளுமன்றக் கால நீடிப்பு அவசியமெனக் கருதும் பட்சத்தில் அப்படியான நீடிப்பை வழங்கலாம்.

7)எண்பிக்கப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மைக்காக ஒரு நீதிபதியைப் பதவியிலிருந்து அகற்றுவதற்காக ஜனாதிபதிக்குப் பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் அப்பிரேரணையை பாராளுமன்றத்தின் சார்பில் சபாநாயகர் ஜனாதிபதிக்குச் சமர்ப்பிப்பார்.

8)இக்கட்டளையின் பந்தி 2) இன் கீழ் நியமிக்கப்பட்ட தெரிகுழுவினால் செய்யப்படும் நுண்ணாய்வுடன் தொடர்புடைய சகல நடவடிக்கைகளும் குறிப்பிட்ட நீதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுகளுள் எதனது மீது குற்றம் காணப்பட்டு தெரிகுழு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும்வரை பகிரங்கப்படுத்தப்படலாகாது.

9) இந்நிலையியற் கட்டளையில் "நீதிபதி"என்பது குடியரசின் ஜனாதிபதி அவர்களால் அவரது கைப்பட எழுத்தாணைமூலம் நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர். மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர். உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் மற்றெல்லா நீதிபதிகள் ஆகியோர் எனப் பொருளாகும்.

78 ஆ. 1) அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தை அல்லது.

ஆ. அரசியலமைப்பின் 103 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையாளரை அல்லது.

இ. அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியை அல்லது.

ஈ.அரசியலமைப்பின் 156 ஆம் உறுப்புரையின்படி நியமிக்கப்பட்ட பாராளுமன்ற நிர்வாக ஆணையாளரை.

பதவியிலிருந்து அகற்றும்படி ஜனாதிபதிக்குப் பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்கும் தீர்மானம் பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் இடம்பெறுமிடத்து இக்கட்டளையின் பந்தி 2) இன் கழ் நியமிக்கப்பட்ட தெரிகுழு பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்த திகதியிலிருந்து ஒரு மாதம் முடிவடைவதன் பின்னர் வரை அத்தீர்மானம் தொடரப்படலாகாது.

2;இந்நிலையியற் கட்டளையின் பந்தி 1) இன் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஒரு தீர்மானம் பாராளுமன்ற ஒழுங்குப் பததிரத்தில் இடம்பெறின் அத்தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக நுண்ணாய்வு செய்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிட ஏழு உறுப்பினர்களுக்குக் குறையாதவர்களைக் கொண்ட பாராளுமன்றத் தெரிகுழுவொன்றைச் சபாநாயகர் நியமித்தல் வேண்டும்.

3)இக்கட்டளையின் பந்தி 2) இன் கீழ் நியமிக்கப்பட தெரிகுழு எந்த ஆளின் பதவி அகற்றுகை. அதன் நுண்ணாய்வுக்குட்பட்டதாகவுள்ளதோ அந்த ஆளுக்கு தெரிகுழு எத்தீர்மானத்தைப் பின்பற்றி நியமிக்கப்பட்டதோ அந்தத் தீர்மானத்திற்குக் கூறப்பட்ட விஷயங்களின் பிரதியொன்றைக் கொடுத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாளை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் எழுத்துமூலம் எதிர்வாதக் கூற்றொன்றைச் சமர்ப்பிக்கும் படித் தேவைப்படுத்துதல் வேண்டும்.

4) இக்கட்டளையின் 2)ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்படும் தெரிகுழு ஆட்களை அழைப்பதற்குப் பத்திரங்களையும் பதிவேடுகளையும் கோருவதற்கும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் தெரிகுழுவின் கூட்ட நடப்பெண் அதன் உறுப்பினர்களின் எண்ணிகையில அரைவாசிக்குக் குறையாததாக இருத்தலும் வேண்டும்.

5) இக்கட்டளையின் 2) ஆம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட தெரிகுழு அதனாற் செய்யப்படும் நுண்ணாய்வுகளின் முடிவில் அதன் முன் எடுக்கப்பட்ட சான்றுக் குறிப்புகளுடன் அதன் முடிவெடுப்புக்களையும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதுடன். பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருதல் தக்கதென அது கருதக்கூடிய எவ்விடயங்கள் பற்றியும் விசேட அறிக்கையும் செய்யலாம்.

6)இக்கட்டளையின் 1)ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பிரேரணையொன்றை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானமொன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுமிடத்து சபாநாயகர் பாராளுமன்றத்தின் சார்பில் அப்பிரேரணையை ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

79. பாராளுமன்றத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் எந்த ஒரு விடயத்திலும் ஓர் உறுப்பினர் ஒரு முறைக்கு மேல் உரையாற்றலாகாது. பின்வருவன இக் கட்டளைக்குப் புறநடையாகும்.

அ) புதுவிடயம் எதையும் புகுத்தாமல் தமதுரையில் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்ட பொருட்பகுதியை விளக்குவதற்காக உரையாற்றுதல்.

ஆ.ஒழுங்குப் பிரச்சினை ஒன்றின் மீது உரையாற்றுதல்.

80. ஒரு பிரேரணையை அல்லது திருத்தத்தைப் பிரேரிப்பவர் அதனை ஆதரித்து உரையாற்றலாம். ஆனால் அப்பிரேரணையோ அல்லது திருத்தமோ முறைப்படி வழிமொழியப்படும் வரை மேற்கொண்டு அதில் விவாதம் அனுமதிக்கப்படுதலாகாது. அப்பிரேரணை சபைக்கு விடப்படலாகாது.

81.தமது இடத்தில் எழுந்து நின்று அக்கிராசனத்திற்கு தலைசாய்ப்பதன் மூலம் ஓர் உறுப்பினர் ஒரு பிரேரணையையோ திருத்தத்தையோ வழி மொழியலாம். இதனால் அவர் விவாதத்தில் பின்னொரு கட்டத்தில் உரையாற்றும் உரிமையை இழக்கமாட்டார்.

82. சபாநாயகர் ஒரு பிரேரணையை முழுமையாகச் சமர்ப்பித்த பின் உறுப்பினர் எவரும் அப்பிரேரணை மீது உரையாற்றமுடியாது. ஒரு பிரேரணையில் ஆம். இல்லை எனும் குரல்களின் பின்னர் அந்தப் பிரேரணை முழுமையாகச் சமர்ப்பிக்கப்பட்டதாகிவிடும்.

83. விவாதத்திற்குரிய ஒரு பிரேரணை பிரேரிக்கப்பட்டு விவாதித்து நிறைவேற்றப்பட்டால் அத்தகைய பிரேணையை மீண்டும் அதே கூட்டத்தொடரில் சபாநாயகரின் அனுமதியின்றிப் பிரேரிக்க எந்தவோர் உறுப்பினரும் தகுதியற்றவர் ஆவார். அத்துடன் பாராளுமன்றம் ஒரு கூட்டத்தொடரில் முடிவு செய்த ஒரு விடயத்தை அதே கூட்டத்தொடரில் சபாநாயகரின் அனுமதியின்றி ஒரு விவாதத்தில் புதுப்பிக்கவும் ஓர் உறுப்பினர் தகுதியற்றவராவார்.

***பாராளுமன்றத்தில் உரையாற்றும் உறுப்பினர்களுக்கான விதிகள்***

84. பாராளுமன்றத்தில் பரிசீலனையில் இருக்கும் எந்தவொரு விடயத்திலும் உரையாற்றும் பொழுது பின்வரும் விதிகள் கண்டிப்பாகக் கவனிக்கப்படல் வேண்டும்.

i)ஒவ்வொரு உறுப்பினரும் சபாநாயகரை நோக்கியே உரையாற்ற வேண்டும் .சபாநாயகரின் அனுமதியுடனன்றி எழுந்து நின்றே உரையாற்றவேண்டும்.

ii)அவர் உரையாற்றும்போது ஒழுங்கை மீறினாலன்றி எவரும் இடையில் குறுக்கிடலாகாது.

iii) அவர் தனது உரையை முடித்ததும் தமது இருக்கையில் மீண்டும் அமர வேண்டும். உரையாற்ற விரும்பும் வேறும் எந்த உறுப்பினரும் அப்பொழுது எழுந்து நிற்கலாம்.

(iv) ஒரே நேரத்தில் இரு உறுப்பினர்கள் எழுந்தால் முதலில் தன் பார்வையில் பட்ட உறுப்பினரை உரையாற்றும்படி சபாநாயகர் அழைக்கவேண்டும்.

(v) ஒவ்வொரு உறுப்பினரும் விவாதிக்கப்படும் விடயத்திற்குட்பட்டே தமது உரையை நிகழ்த்த வேண்டும்.

(vi) சட்டநீதிமன்றமொன்றின் தீர்ப்புக்குட்பட்டுள்ள அல்லது சட்டமுடிவை எதிர்நோக்கியுள்ள எவ்விடயம் பற்றியும் ஓர் உறுப்பினர் குறிப்பிடலாகாது.

(vii) உறுப்பினரெவரும் மற்றெவ்வுறுப்பினரையும் பெயரினால் குறிப்பிடுதல் ஆகாது.

(viii)ஓர் உறுப்பினர் இன்னுமோர் உறுப்பினர் மீது தகாத நோக்கம் கற்பிக்கக்கூடாது.

(ix) ஓர் உறுப்பினர் பாராளுமன்றத்தின் முன் உள்ள பிரேரணை பற்றியோ அதன்மீது பிரேரிக்கப்பட்ட திருத்தம் பற்றியோ உரையாற்றலாம்.

(தொடரும்)

# பாடசாலை மாணவரிடையே சிறுவர் சித்திரப் போட்டி!

(கொழும்பு)

அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சிறுவர் சித்திரப்போட்டி நிகழ்ச்சி ஒன்றை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை கல்வ்யமைச்சு மேற்கொணடுள்ளது.

மாணவர்களின் படைப்பாற்றல், ஆளுமைத் தன்மை என்பவற்றை விருத்தி செய்து சுயமான சிந்தனைகளை வளர்க்கும் நோக்கத்துடன் இந்த சித்திரப்போட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் தெரிவித்துள்ளார்.

தரம்-1 தொடக்கம் 13 வரையிலான அனைத்து மாணவர்களும் போட்டியில் பங்குபற்ற முடியும்.இப்போட்டி ஐந்து பிரிவுகளின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வலய மட்டம்,மாகாண மட்டம், தேசிய மட்டம் ஆகிய மூன்று சுற்றுக்களாக சித்திரப் போட்டி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போட்டிக்காக ஒரு மாணவரால ஒரு ஆக்கத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

18 அங்குலம் நீளமும் 14 அங்குலம அகலமும் கொண்ட எந்த வகையான கடதாசியிலும் சித்திரத்தை வரைய முடியும். பஸ்டல்,நீர்ச்சாயம் மற்றும் சாயத் தூள் என்பவற்றைப் பயன்படுத்தி வர்ணம் தீட்டலாம்.


மாணவர்களால் வரையப்படும் அனைத்து ஆக்கங்களையும் எதிர்வரும் யூன மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது வலயக் கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்குமாறு கல்வியமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது. (க)

# வலம்புரி செய்தியால் கைமேல் பலன்


(பருத்தித்துறை)

வலம்புரியில் வெளியான செய்தியை அடுத்து வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை முதலாம கட்டச் சந்தியில் இருந்து நாவலடிச் சந்தி வரையிலான வீதி திருத்துவதற்காக கற்கள் பறிக்கப்பட்டும் நீண்ட காலமாக திருத்தப்படாமல் இருந்தது.

இதனை வலம்புரி சுட்டிக்காட்டியிருநதது. இச்செய்தியை அடுத்து 3 பிரதான பாடசாலைகளுககுச் செல்லும் 751 பாதை இலக்க பஸ் போக்குவரத்துச் செய்யும் இப்பிரதான வீதி தற்போது திருத்தப்பட்டு சிறந்த முறையில் போக்குவரத்து செய்யக்கூடியதாகவுள்ளது. (க-7,35)



இளைப்பாறிச் செல்லும் புற்றளை மகாவித்தியாலய அதிபர் திருமதி சகுந்தலா இந்திரராஜாவின் சேவையைப் பாராட்டிப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தால் நடாத்தப்பட்ட விழாவில் அவர் நன்றி உரையாற்றுகிறார். அருகில் விழாத்தலைவர் எஸ். கதிர்காமநாதன், சங்க உறுப்பினர் எஸ். திருச்செல்வம் ஆகியோர் உள்ளனர். (படம்:- பரு. நிருபர்)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை உயர் வகுப்பு மாணவர் மன்ற ஒன்றுகூடலிலும் "ஒளியை நோக்கி" சஞ்சிகை வெளியீட்டு விழாவிலும் முதலாவது சஞ்சிகையை பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி எஸ். சிவனருள்சுந்தரம் மன்றப் பொருளாளரிடமிருந்து பெறுகிறார். (படம்: பரு. நிருபர்)

# தென்மராட்சி பிரதேசத்துக்கு முழுமையாக மின் விநியோகம்

## கிடைக்க இரவிராஜ் எம்.பி. நடவடிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்துக்கு முழுமையாக மின்சார விநியோகம் கிடைக்கும் வரை நான் எனது நடவடிக்கைகளிலிருந்து ஓயப்போவதில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா இரவிராஜ் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் எல்லைப்புறக் கிராமமான மிருசுவில் படித்த மகளிர் திட்டத்திற்கு மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று நாவற்குழி கோயிலாக்கண்டிப் பகுதிக்கும் மின் இணைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன

அத்துடன் பலாலி, கச்சாய், மந்துவில கிராமங்களுக்கும் மின்சாரம் விநியோகத்திற்கான வேலைகள் ஆரமபிக்கப்படவுள்ளன. மின்சார விநியோகத்தைப் பொறுத்த வரையில் இலங்கை மின்சாரசபை மிகவும் திருப்திகரமான முறையில் இயங்கி வருகின்றது.

மின்சாரசபையிடம் மின் விநியோகத்திற்கான தூண்கள், லைன் வயா மற்றும் சேவை இணைப்பு வயர்கள, மின மானிகள் போன்றவை பற்றாககுறையாக இருக்கின்றன. இருந்தபோதிலும் கூட நான் உயர்மட்ட அழுததங்களை ஏற்படுத்தி மின்சார விநியோகத்தை துரிதப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன் என்றார்.

(க-7,16)

# தனிநாட்டுக் கோரிக்கையை அமெரிக்கா ஆதரிப்பதானது புலிகளின் இராஜதந்திரத்திற்குக் கிடைத்த மாபெரும் வெற்றி

## -தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. மா.க.ஈழவேந்தன்



(யாழ்ப்பாணம்)

**புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை அமெரிக்கா ஒருபோதும் எதிர்க்கவில்லை என்று அமெரிக்காவின் தெற்காசிய அலுவல்களுக்கான உதவிச் செயலாளர் கிறிஸ்ரீனா றொக்கா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவரிடம் கூறிய கருத்து விடுதலைப்புலிகளின் இராஜதந்திரத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என மா.க.ஈழவேந்தன் எம்.பி தெரிவித்துள்ளார்.**

ஈழவேந்தன் எம்.பி இது விடயம் தொடர்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

1986இல் ஐ.நா.மன்றத்தின் 40 ஆண்டு நிறைவு விழாவிற்குச் சென்று அங்கு வந்திருந்த பேராளருக்கு இலங்கையில் எழுந்துள்ள ஈழத்தமிழரின் இனச்சிக்கலை விளக்கி ஐ.நா. மன்றத்தின் மக்கள் தொடர்பு அலுவலர் மக்காதியுவுடன் நான் உரையாடியதற்குப் பின்பு அமெரிக்க அரசதிணைக்களத்தோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு இலங்கைப் பிரிவின் அலுவலர் உட்பட அமெரிக்காவின் அரச உயர் அலுவலர்களுடன் பேசினேன்.

இதன்போது, சின்னஞ்சிறிய இலங்கைத்தீவை நீங்கள் துண்டாட முயலுகின்றீர்கள். இவ்விதம் நீங்கள் செய்ய முயல்வீர்களாயின் உங்களை அடக்கி ஒடுக்கி நசுக்குவோம் என்று ஓங்கி ஒலித்த உயர் அமெரிக்க அலுவலர்கள், 19 ஆண்டுகள் உருணடோடிய நிலையில், புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை நாம் ஒருபோதும் எதிர்க்கவில்லை என்று கூற வந்திருப்பது அமெரிக்கச் சிந்தனையில் ஏற்பட்ட வியத்தகு மாற்றத்தையே எடுத்துக்காட்டுகின்றது. அத்தோடு இது விடுதலைப்புலிகளுக்குத் தூதுவ நிலையில் கிடைத்த உவகை தரும் வெற்றிச் செய்தியுமாகும்.

1986இல் அமெரிக்க உயர் அலுவலர்களுடன் நான் பேசியபோது தனிநாடு கேட்கும நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். ஆனால், அமெரிக்க அரசியல் யாப்பில் மிஞ்சும் அதிகாரங்கள் அனைத்தும் மைய அரசின் தலையீடின்றி மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்டது வரவேற்கத்தக்கது.

எமக்கு இதய நிறைவைத் தரும் இணைப்பாட்சியை இலங்கையில் உருவாக்க உதவுங்கள் என்று நான் கேட்டபோது நேரடியாகப் பதில கூறாது, இலங்கைத்தீவு அழகான தவெனக் கூறி திசைமாற்ற முயன்றபோது, இலங்கைத்தீவு அழகான தீவு என்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால், இலங்கைத்தீவில் வதியும் மக்கள் விலங்குகளாக செயற்படுகிறார்கள என்று நான் கூறியபோது அவர்கள் பொருள் பொதிந்த புன்னகை பூத்ததை நான் இன்று நினைவு கொள்கின்றேன்.

ஆனால் இ[illegible] சூழ்நிலையில் தேவையற்ற நிலையில் பழையவற்றைக் கிண்டிக் கிளற நாம் விரும்பவில்லை. [illegible] அமெரிக்காவின் மனமாற்றம் [illegible]ற்ற மகிழ்ச்சியையே எமக்குத் தருகின்றது.

எனினும், விடுதலைப்புலிகள் வன்முறைகளைக் கைவிடவேண்டுமெனக் கிறிஸ்ரீனா றொக்கா கூறியுள்ளதுதான் எம் சிந்தனைக்குரியது. எம்மைப் பொறுத்தவரையில் வன்முறையையோ ஆயுதப் போராட்டத்தையோ நாம் விரும்புபவர்கள் அல்லர். இறப்பினில் இன்பம் காண்போம் என்று வசனம் பேசுபவரும் அல்லர். தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அன்று இலங்கையில் மறைந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா முறையாகப் புத்த மதத்தைக் கடைப்பிடித்திருப்பாராயின் நாம் ஆயுதம் தாங்கும் நிலை ஏற்பட்டிருக்காது என தெட்டத் தெளிவாகக் கூறிய கூற்று பொருள் பொதிந்ததாகவே உள்ளது.

மறைந்த எம் தந்தை செல்வா கூட, 'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டு' என்ற கிறிஸ்தவ மரபில் ஊறித்திளைதத உண்மைக் கிறிஸ்தவர். அத்தோடு காந்தியத்தில் நம்பிக்கை வைத்து இறுதி வரையில் அறவழிப் போராட்டத்தை நடத்தியவர். ஆனால், தொடர்ச்சியாக சிங்களத் தலைமைப்பீடத்தால் ஏமாறறப்பட்ட அவர், 'இனிமேல் என் சொல எடுபடாத நிலை உருவாகி விட்டது. இனிமேல் நாட்டில் துப்பாக்கியின் குரலே கேட்கப் போகின்றது' என்று தியாகி [illegible]வகுமாரின் மறைவையொட்டி அவர் கூறிய கூற்று இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

அமெரிக்கா பிரித்தானியாவிலிருந்து விடுதலை பெற நடாத்திய போராட்டம் அறவழிப்போராட்டமாக அன்றி ஆயுதப் போராட்டமாக விளங்கியதை வரலாறு வரைந்துள்ளது. பொஸ்ரன் தேநீர் விருந்து என்ற நிகழ்ச்சி பெரும் போராக வெடித்ததை அமெரிக்க அரசு மறுக்காது என நம்புகின்றோம். உலகின் விடுதலை வரலாறு அனைத்தும் ஆயுதம் தாங்கிய போராட்டமாக அமைந்திருப்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உண்டு.

அண்ணல் காந்தியின் அறவழிப் போராட்டம் ஓர் விதிவிலககு - புறநடை. ஆனால் அண்ணல் காந்தியடிகள் அடிக்கடி வட்டமேசை மாநாட்டிற்கு அழைக்கப்பட்டதற்கு வீரம் தீரம் செறிந்த சுபாஸ் சந்திர போசின் ஆயுதப் போராட்டமே காரணமென்று வரலாற்றாசிரியர்கள் வரைந்துள்ளனர்.

1942இல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் வன்முறை தலைதூக்கியிருந்தும், அதுவே, 1947 ஒகஸ்ட் 15இல் இந்தியா விடுதலை பெறுவதற்கும் வழிவகுத்ததென்று வரலாற்றாசிரியர்கள் நடுநிலையில் நவிலகின்ற கருத்துக்களை வரலாறறுணர்வுள்ளவர்கள் எவரும் மறுக்க முடியாது.

எனினும், புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையை காலம் கடந்த நிலையில், ஞானம் பெற்று வரவேற்ற அமெரிக்காவிற்கு எம் உளம் நிறைந்த நன்றி. காலப்போக்கில் எம் போராட்டம் என்ன வடிவம் எடுக்குமோ என்பதை நாம் உறுதியுடன கூறமுடியாது.

சிங்களத் தலைமைப்பீடத்தில் உண்மையான மனமாற்றம் ஏற்படின வன்முறை தலைதூக்குவதை நாம் தவிர்க்கலாம். ஆனால், சிங்களத் தலைமைப்பீடத்தில் நாம் விரும்பிய மனமாற்றம் ஏற்படாவிடின் எமக்குள்ள மாற்றுவழி என்ன? 'சொல்லப் பயன்படும் சான்றோராக' சிங்களவர் விளங்கின் 'கொல்லப் பயன்படும் கீழ்' என்ற வள்ளுவரின் குறளின் இறுதித் தொடரை நாம் நீக்குவதற்கு ஆயத்தம். இதற்கு காலம்தான் பதில் கூற வேண்டும்.

தமிழீழக் கோரிக்கையை என்றும் ஆதரித்துவந்துள்ள மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோவும 'தமிழீழம் மலர்வது என்பது வரலாற்றின் கட்டாயம்' என்பதை அண்மையில் அடித்துக் கூறியுள்ளார்.

400 ஆண்டுகள் விடுதலைப் போராட்டத்தை நடாத்தி வெற்றிகள பல பெற்றுள்ள அயர்லாந்து நாடு கூட எமககருகில் வந்து எம் விடுதலைப போராட்டத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளமை உலகின் கருத்தினை எம்பால் ஈர்ப்பதில் விடுதலைப்புலிகள் மாபெரும் வெற்றியை ஈட்டியுள்ளனர் என்பதையே உலகிற்குப் பறைசாற்றுகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட 282 பாடசாலைகளைப் புனரமைக்க 15 — 25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையங்களாகப் பயன்படுத்தப்பட்ட பாடசாலைகள் உட்பட சேதமடைந்த 282 பாடசாலைகள் என்பவற்றைப் புனரமைப்பதற்குச் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் கொடை வள்ளல்கள் முன்வந்துள்ளனர்.

கல்வியமைச்சின் வேண்டுகோளுக்கமைய இந்த உதவி கிடைக்கப்பெறவுள்ளது. இப்பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு 15 மில்லியன் தொடக்கம் 25 மில்லியன் ரூபா வரையான நிதியுதவியை இந்த நிறுவனங்கள் செலவிட ஒதுக்கியிருப்பதாக கல்வியமைச்சின சுனாமி அனர்த்த பாடசாலை மீளகட்டமைப்புக்குழுவின் செயலாளர் எஸகுணவர்த்தன தெரிவித்தார். (ற-4)

## பதவி உயர்வு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பிரதம எழுதுநராகக் கடமையாற்றிய பாலசுப்பிரமணியம் வடக்கு- கிழக்கு மாகாண சபையினால் அதி சிறப்பு எழுநராக பதவி உயர்த்தப்பட்டு சாவகச்சேரி நகரசபையின் நிர்வாக உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பிரதேச சபையில இவருக்கு வழங்கப்பட்ட நியமனம் பினனர் சாவகச்சேரி நகரசபைக்கு மாறறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7-47)

## பாரம்பரிய விளையாட்டு விழா

சரசாலை மாதர்களும் அகதிகள புனர்வாழ்வு நிறுவனமும் இணைநது நடாத்தும் பாரம்பரிய விளையாட்டு விழா இன்று பி.ப.1மணிக்கு மட்டுவில் கமலாசினி வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் திருமதி கலாபவானி குணரத்தினம் தலைமையில் நடைபெறும்.

யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரதம விருநதினராகக் கலந்துகொள்ளும் இவ் விழாவில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் தேதேவானந்தா, சரசாலை சரஸ்வதி விததியாலய அதிபர் திருமதி தேஜெயமணி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், மட்டுவில் கமலாசினி வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன், சரசாலை தெற்கு கிராம உத்தியோகத்தர் ந.க.உபேந்திரன் மற்றும் எஸ்.கனகராசா ஆகியோர் கௌரவ விருநதினர்களாகவும் கலந்துகொள்வார்கள்.

பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள, சிறுவர் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து மகேஸ்வரி சனசமூக நிலையத்தில் காத்தவராயன் சிந்துநடைக் கூத்தும் நடைபெறும்.

இதேவேளை, பாரம்பரிய கலைகளை வளர்த்தலும் பெண்களை வலுவுளளவர்கள் ஆக்குதலும், தலைமைதுவப பண்பு, குழுப்பங்கேற்பு என்பவற்றை வளர்த்தலும் என்ற எண்ணக்கருவுடன் இணைந்த செயற்பாடுகளுள் ஒன்றாக இந்நிகழ்வு அமைவது இங்கு குறிப்பிடத்தக்கது. (து)

## 4000 வீடுகளை மன்னாரில் நிர்மாணிக்க நடவடிக்கை


(புத்தளம்)

இனப்பிரச்சினை காரணமாக வடக்கு -கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கென மன்னாரில் முதற் கட்டமாக 4 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நடவடிக்கை எடுத்துள்ளார். இதன்படி மன்னார் முஸலி கிராமத்தில ஆயிரத்து தொளாயிரம் வீடுகளும மன்னார் மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் 2 ஆயிரதது 100 வீடுகளுகமாக மொத்தமாக 4 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன

முஸ்லீம் மக்கள் வாழும் பகுதியில் தற்போது மின்சார இணைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. மற்றைய கட்டமைப்பு வேலைகளும விரைவில் ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கூறினார்.

இதேவேளை, வடக்கு- கிழக்கில இருந்து வெளியேறிய மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான இந்த நடவடிக்கைக்கு உதவிகளை வழங்குமாறும் கோரி அமைச்சர் ரிஷாத் பதியூதின் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(க-5)



சுவிஸில் நடைபெற்ற விடுதலை முழக்கம் நிகழ்வுக் காட்சிகளிலிருந்து....

## விண்ணப்பம் கோரல்

(பொன்னாலை)

கட்டுநாயக்காவில் உள்ள தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தால் நடாத்தப்படவுள்ள எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமாப் பயிற்சி நெறிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நான்கு வருடத்திற்கான இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான, எந்திரவியல் பாடங்களில் சித்தியடைந்த 18க்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் மே மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம்.

இதுதொடர்பான மேலதிக விபரங்களையும், விண்ணப்பப்படிவததையும் தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, இல.7 கோயில்வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். (க-7-49)

# எப்படிச் சொல்வேனடி...



திருமணம் முடிந்த புதுமணப் பெண்களின் மனநிலையில் புது வாழ்வின் மகிழ்ச்சி ஒருபுறம் இருந் தாலும், மணவாழ்க்கை துவங்குகையில் அதன் விளைவாக ஏற்படும் உடல்ரீதியான சங்கடங் களைச் சொல்லத் தயங்கும் மனத் தவிப்பு நிலவுவது இயற் கையே.

அவற்றைத் தகுந்த மருத்துவ ஆலோசனைகள் பெறுவதன் மூல மாக நிவர்த்திக்க இயலும். மண உறவுகொள்கையில் வலி மற்றும் விருப்பமின்மைக்கான

## மருத்துவ விளக்கம்

காரணங்கள்.

மண உறவில் விருப்பமின்மை அல்லது தவிர்க்க விரும்புவதற்கு அடிப்படையாக பெரும்பாலும் மன ரீதியான சில சமயம் உடல்ரீதி யான காரணங்கள் இருக்கலாம்.

***மனரீதியான காரணங்கள்***

* வளரும் வயதில், பாலியல் உணர்வு கொள்ளுதல் தவறானது என்றும், மண உறவு கொள்ளு தல் மனைவியின் கடமை என்றும் சொல்லி வளர்க்கப்பட்ட விதம்.

* குழந்தையாகவும், வளரும் வயதிலும் பார்த்து வெறுத்துப் போன மகிழ்ச்சியைப் பிரதிபலிக் காத குடும்பச் சூழ்நிலைகள்.

* மணந்து கொண்டவரிடம் முழு மையாக அன்புசெலுத்த இயலாமை ஒரே குழந்தையாக வளர்ந்து பெற் றோரைப் பிரிய விரும்பாதது; கண வரின் தினசரி நடவடிக்கைகள், போக்குகள் தன் மனதில் கற்பனை செய்திருந்தவனைப் போலன்றி இருத்தல் இவைகளே அதற்கு தடைக்கற்களாக இருக்கக்கூடும். தன்னையே முதன்மைப்படுத்த விரும்பும் பெண்ணும் பாதிக்கப் படக்கூடும்.

* கருவுறுதலின்போதும், பிரசவ சமயம் துன்பங்களையும் பிறர் வாயிலாகக் கேட்டதனால் ஏற்பட்ட பய உணர்ச்சி, சில பெண்களின் இயற்கையான பாலுணர்வை அடக்கிவிடக்கூடும்.

* தற்காலிக கருத்தடை முறை யாக கருத்தடை மாத்திரைகளைப் பயன்படுத்தும் பெண்களின் இயல் பான பாலியல் உணர்வை, இந்த ஹார்மோன் மாத்திரைகள் கணிச மாகக் குறைக்கக்கூடும்.

* புதிதாக ஏற்றுக்கொண்ட வீட்டுப்பொறுப்புகள், வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அதிக உடல் சோர்வை ஏற்படுத்தக்கூடும் இதனால் ஆர்வமின்மை ஏற்படு வது சகஜம்தான்.

***சிறுநீர்ப்பை தொற்று (Honeymoon Cystitis)***

இந்த மருத்துவச் சொல் புது மணப் பெண்களின் சிறுநீர்ப் பையில் ஏற்படும் ஒருவகை தொற் றினைக் குறிப்பிடுவதாகும். பெண் ணின் கருப்பாதையிலும், வெளிப் பகுதியிலும் உள்ள சாதாரணமான பாதிப்பு விளைவிக்காத கிருமிகள் மண உறவிற்குப் பின் சிறுநீர்ப் பாதை வழியே சிறுநீர்ப்பையில் தொற்றினை ஏற்படுத்தக்கூடும். இதனாலும், மற்றும் மண உறவி னால் ஏற்படும் வலியினாலும் சிறு நீர் முழுவதுமாக வெளியேறாமல் தேங்கியிருப்பதாலும் சிறுநீர்ப் பையில் உள்ள தொற்று இன்னும் அதிகமாகப் பெருக வாய்ப்பு உண்டு.

அது மட்டுமல்லாது, தம்பதியி னர் பயன்படுத்தும் கருத்தடை சாதகங்களான சேர்விகல் டயப்ராம் எனப்படும் பொருளும், விந்தணுக் களை அழிக்கவல்ல ஜெல் **(spermicidal gel)** ஆகியவையும் தொற்றினைப் பல்கிப பெருகி, சிறு நீர்ப்பையில் பாதிப்பைப் ஏற்படுத்த வழிசெய்கின்றன.

இந்தத் தொற்றினால் தற்காலிக அடிவயிற்று வலியும், சிறுநீர் கழிக்கையில் வலியும், முழுவது மாக வெளியேற்ற இயலாத தன் மையும் அதனால் அடிக்கடி சிறு நீர் கழிக்க வேண்டியிருத்தலும், புதுமனப் பெண்ணுக்கு மனதத விப்பை ஏற்படுத்துவது இயற்கையே.

எனவே, மருத்துவ ஆலோச னையை நாடுதல் அவசியம். அது மட்டுமன்று இந்தத் தொற்றினைக் குணப்படுத்தாவிடில், அதன் பின் விளைவுகளாக சிறுநீரகமும் பின்பு பாதிப்புக்கு ஆளாக நேரி டலாம்.

இத்தகைய நிலை மண வாழ்க் க்கையை மெல்ல மெல்ல சிதைக் கக்கூடுமென்பதால், புதுமண மக் கள், ஒருவரையொருவர் பழி சுமத்திக் கொள்ளாமல், மகப்பேறு மருத்து வரையும், பின்பு அவர் மூல மாக மணவியல் ஆலோசகரையும் அணுகுதல் அவசியம். இதனால் உடலியல் காரணங்களும், மனவி யல் காரணங்களும் கண்டறிந்து களையப்பட வாய்ப்புகள் உண்டு

## பூப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயப் பாடசாலை களுக்கிடையிலான பூப்பந்தாட்டப் போட்டி சுண்டுக்குளி மகளிர் கல் லூரியில் இன்று நடைபெறவுள் ளது.

முற்பகல் 8.30 மணிக்கு 19வயது பிரிவு பெண்களுக்கும் 11.00 மணிக்கு 19வயது ஆண்க ளுக்கும் இப்போட்டி நடைபெறும்.

* * *

## மேசைப் பந்தாட்டம்

யாழ்.கல்வி வலயப் பாடசாலை களுக்கிடையிலான மேசைப்பந் தாட்டப்போட்டி இன்று காலை 8.30மணிக்கு யாழ்.மத்திய கல் லூரியில் நடைபெறவுள்ளது.

19வயதிற்குட்பட்ட ஆண், பெண்களுக்கான போட்டியே இன்று நடைபெறவுள்ளது.

(ற-19)

## அதிபர் கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபா களுக்கான விசேட கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல் லூரியில் நடைபெறவுள்ளது இக் கூட்டத்தில் சகலஅதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு மதி றெ.இருதயநாதன் கேட்டுள் ளார்.

(க-7)

## மாணவர் அனுமதியில் மோசடி; 200க்கும் அதிகமான முறைப்பாடு

(கொழும்பு)

முதலாம் தரத்துக்கு மாணவர் களை சேர்த்துக்கொள்வதில் இடம்பெற்ற மோசடி தொடர்பாக இருநூறுக்கும் மேற்பட்ட முறைப் பாடுகள் கிடைத்துள்ளதாக ஜனாதி பதியால் நியமிக்கப்பட்ட விசா ரணைக்குழு தெரிவித்துள்ளது.

இம் முறைப்பாடுகளில் நூற்றி நாற்பத்தைந்து, நிதி மோசடிகள் தொடர்பானவை என்று விசாரணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி எ.விக்ரமசிங்க தெரி வித்துள்ளார்.

கிடைக்கப்பெற்றுள்ள முறைப் பாடுகளுக்கேற்ப பதின்மூன்று பாடசாலைகள் தொடர்பான விசா ரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கேற்ப ஒன்பது அதி பர்கள் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர். இதே வேளை, சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ள அதிபர்களுக்கு எதிராக மேலும் பலமுறைப்பாடு கள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய முறைகேடுகளில் தொடர்புடையவர் மீது சட்ட நட வடிக்கை எடுக்கவுளளதாகவும் விசா ரணைக் குழுவின் பணிப்பாளா நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-5)

## சுகாதார நிலையக் கட்டடத்தில் புலிகள் முகாம் அமைத்துள்ளதாக கண்காணிப்புக்குழுவில் முறைப்பாடு

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் பிர தேசத்தின் மணல் சேனைப் பகுதி யிலுள்ள சுகாதார நிலயைக்கட் டடம் ஒன்றில் விடுதலைப்புலிகள் தமது அரசியல்துறைப் பணி யகத்தை அமைத்துள்ளதாக திரு கோணமலை மாவட்டப் போர்நிறுத் தககண்காணிப்புக்குழுவில் முறைப பாடு செய்யப்பட்டுள்ளதாக கண் காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

கந்தளாய் இராணுவ கட்டளைத் தலைமை அதிகாரியே இந்த முறைப்பாட்டினைப் பதிவுசெய் துள்ளதாக யுத்தநிறுத்தக் கண் காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரி வித்தன.

நேற்று முன்தினம் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதால இது தொடர்பான விசாரணைகளை தாங்கள் மேற்கொள்ளவிருப்பதாக வும் கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(ற-4)

## விற்றமின் "A" போஷாக்கு மருந்து 151 நிலையங்களில் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல மாவட்டங்க ளிலும் உள்ள 6 மாதம் முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சுகாதார அமைச்சு யுனிசெவ் நிறு வனத்தின் உதவியுடன் நெற்றி னேல் எனப்படுகின்ற சக்திவாய்ந்த "விற்றமின் ஏ" போஷாக்கு மருந்தை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

இந்த வகையில் யாழ்.மாவட் டத்தில் 6 மாதம் முதல் 5வயதிற் குட்பட்ட சகல குழந்தைகளுக் கும் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00மணி முதல மாலை 4.00 மணிவரை பருத் தித்துறை, சாவகச்சேரி, கோப்பாய் ஊர்காவற்றுறை தெல்லிப்பளை, மானிப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரி வுகளிலுள்ள 151நிலையங்களில் வைத்து இம்மருந்து வழங்கப்பட வுள்ளது.

எனவே, 6 மாதம் முதல் 5வய திற்குட்பட்ட சகல குழந்தைகளுக் கும் இவ் விற்றமின் ஏ போஷாக்கு மருந்தை தவறாது வழங்குமாறு யாழ.மாவட்ட தாய்சேய் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி. என்.சொலமன் அறிவித்துள்ளார்.

சுகாதார வைத்திய பிரிவு ரீதி யாக மருந்து வழங்கப்படவுள்ள நிலையங்கள் வருமாறு, .

**பருத்தித்துறை**

வள்ளாங்கும், கட்டைக்காடு, மருதங்கேணி, ஆழியவளை, உடு துறை, வத்தராயன், வெற்றிலைக் கேணி, செம்பியன்பற்று, மாமுனை, மருதங்கேணி வடக்கு, தும்பளை கிழக்கு, 4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை, கற்கோவளம், மாதனை, இன்பருட்டி, வியாபாரி மூலை, மணற்காடு, குடத்தனை, அம்பன், ஆதிகோவிலடி, வல்வெட் டித்துறை ஆகிய நலன்புரி நிலை யங்கள்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை, தொண்டைமனாறு ஆரம்ப சுகாதார நிலையம், பொலி கண்டி, திக்கம், புலோலி மேற்கு, பருத்தித்துறை மேற்கு, ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை, புற்றளை, கோவில்கடவை-துன் னாலை, கட்டைவேலி, குடவத்தை-துன்னாலை, வல்வெட்டி, சோளங் கன், மணியகாரன் தோட்டம், கப்புதூ, விக்னேஸ்வரா கரவெட்டி, மத்திய மருந்தகம், கரவெட்டி, கௌந்தில் கரவெடடி, கம்பர்மலை, அல்வாய் கிராமசபை, இமை யாணன் மாதர் சங்கம், ஆரம்ப சுகாதார நிலையம், கரணவாய் வடக்கு, உடுப்பிட்டி இலகடி, நூலகம், வதிரி.

**சாவகச்சேரி**

தச்சன்தோப்பு, அம்பிகா மாதர் சங்கம், மத்திய மருந்தகம் கைதடி, வேற்பிள்ளை நூலகம், மட்டுவில் தெற்கு, கிராமசபை அலுவலகம், சரசாலை, ஆரம்ப சுகாதார நிலையம் மட்டுவில், ஆரம்ப சுகாதார நிலையம் மந் துவில், பொது நூலகம் நுணாவில், குடும்ப நலசேவை உத்தியோகத் தர் அலுவலகம் கல்வயல், சுகா தார வைத்தி அதிகாரி பணிமனை (நகரசபை சங்கத்தானை), ஆரம்ப சுகாதார நிலையம் கச்சாய், பெள்ளாம் பொக்கட்டி நூலகம் கொடிகாமம், புத்தூர்சந்தி நூல கம், மீசாலை, கிராமசபை கொடி காமம், ஆரம்ப சுகாதார நிலை யம் உசன், தவசிகுளம், மத்திய மருந்தகம் மிருசுவில், மத்திய மருந்தகம் வரணி.

**கோப்பாய**

தம்பாலை கிராம அபிவிருத் திச்சங்கம், சுற்றயல் கூறு அச்சு வேலி, ஆவரங்கால் மத்தி ஆரம்ப பாடசாலை, மத்திய மருந்தகம் புத்தூர், கலைமதி சனசமூக நிலை யம், ஆரம்ப சுகாதார நிலையம் வாதரவத்தை, சிறிப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம், நீர்வேலி கிராம அபிவிருத்திச் சங்கம், ஆரம்ப சுகாதார நிலையம் அச் செழு, ஊரெழு கிராம அபிவிருத் திச் சங்கம், உரும்பிராய் மேற்கு, மத்திய மருந்தகம் உரும்பிராய், செல்வபுரம் நூலகம் உரும்பிராய் கிழக்கு, சு.வை.அதிகாரி பணி மனை கோப்பாய், கோப்பாய் சன சமூகநிலையம், கட்டப்பிராய் கிராம அபிவிருத்திச்சங்கம், மத்திய மருந தகம கோண்டாவில், மத்திய மருந் தகமும் மகப்பேற்று நிலையமும் கோண்டாவில், மத்திய மருந்தகம் கொக்குவில், சைவபாடசாலை கல்வியங்காடு, காளிகோவிலடி திருநெல்வேலி, திருநெல்வேலி கிராம அபிவிருத்திச்சங்கம், கலா மன்றம் திருநெல்வேலி, மத்திய மருந்தகம் கொக்குவில், குளப் பிட்டி ஆறுகால்மடம்.

**ஊர்காவற்றுறை**

சுற்றயல் கூறு காரைநகர் I, காரைநகர் II
காரைநகர் III
மாவட்ட வைத்தியசாலை காரை நகர், தம்பாட்டி, நாரந்தனை, மெலிஞ்சிமுனை, ஆரம்ப சுகாதார நிலையம் புளியங்கூடல், சுற்றயல் கூறு அனலைதீவு, ஆரம்ப சுகா தார நிலையம் எழுவைதீவு, கிராம சுகாதார நிலையம் அல்லைப பிட்டி, கிராம சுகாதார நிலையம் மண்மடைதீவு, கிராமிய வைத் தியசாலை வேலனை, கிராம சுகா தார நிலையம் சரவணை, மாவட்ட வைத்தியசாலை, புங்குடுதீவு, அம்பலவாணர் அரங்கு, புங்குடு தீவு, சுற்றயல் கூறு நயினாதீவு, சுற்றயல் கூறு நெடுந்தீவு.

**தெல்லிப்பளை**

ஆரம்ப சுகாதார நிலையம் தாவடி, மத்திய மருந்தகம் இணு வில், ஆரம்ப சுகாதார நிலையம் சங்குவேலி நூலகம் கந்தரோடை (சிகிச்சை நிலையம்), மத்திய மருந் தகம் ஏழாலை, மத்திய மருந் தகம் உடுவில், ஏழாலை மயி லங்காடு மாதர் சங்கம், மத்திய மருந்தகம் புன்னாலைக்கட்டுவன், ஆரம்ப சுகாதார நிலையம் வசா விளான், மாவட்ட வைத்தியசாலை தெலலிப்பளை-2, குழமங்கால் மல் லாகம் மத்தி மல்லாகம், பண்ணாலை நூலகம் (சிகிச்சை நிலையம்), ஆரம்ப சுகாதார நிலையம் அள வெட்டி, ஆரம்ப சுகாதார நிலை யம் சீனன்கலட்டி, மல்வம் உடுவில தெற்கு, மத்திய மருந்தகம் சுன் னாகம்-2.

**மானிப்பாய்**

சுற்றயல் கூறு சங்கானை, ஆரம்ப சுகாதார நிலையம் பண் ணாகம், மத்திய மருந்தகம் தொல் புரம், மத்திய மருந்தகம் வட்டுக் கோட்டை, கிராமிய வைத்திய சாலை வட்டுக்கோட்டை, நவாலி கிறிஸ்தவ இளைஞர் மன்றம், ஆரம்ப சுகாதார நிலையம் முள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம் சாவல் காடு, மத்திய மருந்தகம் மகப்பேற்று நிலையம் மானிப்பாய், குண்டடி நூல கம் சுதுமலை, கட்டுடை ஆரம்ப பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலை யைம் பிரான்பற்று, மத்திய மருந் தகம் இளவாலை, கிராமிய வைத் தியசாலை பண்டத்தரிப்பு.

**யாழ்ப்பாணம்**

நாவலர் மகப்பேற்று நிலையம், நமசிவாயம் ஆரம்ப பாடசாலை, சென்.நிக்கலஸ் பாடசாலை, அரி யாலை மகப்பேற்று நிலையம், வண்ணார்பண்னை சிகிச்சை நிலை யம், சுவாமியார் சிகிச்சை நிலை யம், பாசையூர் சனசமூக நிலை யம், மத்திய மருந்தகமும் மகப்பேற்று நிலையமும் யாழ்ப்பாணம், மாண வர் கல்வி நிலையம் (ஜே/67), ஏவா மரியா ஆரம்ப பாடசாலை, ஜுபிலி மகப்பேற்று நிலையம், நல்லூர் சனசமூக நிலையம், முருகன் சன சமூக நிலையம், ஆத்திசூடி சன சமூக நிலையம், சித்த மருத்துவ வைத்தியசாலை ... ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(ற-19)

# ஆழிப்பேரலை அனர்த்தமும் உணவு உத்தரவாதமும் - ஓர் நோக்கு

இரா.சர்வானந்தா

கடந்த வருடம் டிசம்பர் 26 இல் இடம்பெற்ற ஆழிப்பேரலையின் மூர்க்கத்தனமான தாக்கத்தால் பொதுமக்கள் உயிரிழப்பு மற்றும் வாழ்வியல் ஆதாரங்கள் எனப் பாரிய அழிவைச் சந்தித்தனர்.

மனித வளத்திற்கு ஏற்பட்ட அழிவு ஈடுசெய்ய முடியாததும், பெருந் துயருக்கும் உரியதாகின்றது. பல குடும்பங்கள் சீரழிக்கப்பட்டு பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதனால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள உடல், உளப்பாதிப்புக்களும் நோக்கப்படவேண்டியது.

இவற்றை ஈடுசெய்வதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்படுகிறது. அத்துடன் வாழ்வாதார மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகிறது. இவை அமுலாக்கப்படும் வேகம் மற்றும் இதனால் சூழலில் ஏற்பட்டுள்ள தாக்கங்களை எவ்வாறு ஈடுசெய்யப் போகிறோம். குறுகிய மற்றும் நீண்டகால நோக்கில் ஈடு செய்யப்போகிறோம் என்பது அனைவரும் சிந்தித்து ஒன்றிணைந்து செயற்படவேண்டிய பிரதான விடயமாகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தம் - சூழலில் நேரடியாகவும் உணவு உத்தரவாதத்தில் மறைமுகமாகவோ அன்றி நேரடியாகவோ அல்லது நீண்டகாலத்திலோ ஏற்படுத்தும் முக்கிய தாக்கங்களாவன:-

1) வடகிழக்குப் பிராந்தியத்தில் அறுவடைக்குத் தயாராக இருந்த வயல்களுக்கு ஏற்பட்ட அழிவு மிக முக்கியமான ஒன்றாகும். இவை தொடர்பாக தற்போது மதிப்பீடு நடைபெற்று வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட அழிவு மிக அதிகமாகும்.

அத்துடன், அறுவடைக்கான ஆள்பற்றாக்குறையும் ஏற்பட்டது. இது வடக்கு-கிழக்கை அண்டிய மாகாணங்களில் கூட தாக்கத்தினை ஏற்படுத்தியது. தற்போது உடனடியாக சந்தையில் பாரிய மாற்றத்தினை நாம் உணராவிட்டாலும், வடகிழக்கு மாகாண உணவுக் கையிருப்பு நிலை மறைமுகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பது நோக்கப்படவேண்டியது.

இப் பிராந்தியத்தில் தற்போதைய அமைதிச் சூழலும், இயல்பு நிலையும் பாதிக்கப்படும் இடத்து இதன் தாக்கம் அதிகமாக உணரப்படும்.

2) திடீரென மக்களிடையே ஏற்பட்ட உணவுப்பழக்க மாற்றம், விலங்கு வேளாண்மை சார் உற்பத்திகளுக்கு அதிக கேள்வியை ஏற்படுத்தி விலை மாற்றங்களையும், பொருட் பற்றாக்குறையையும் ஏற்படுத்தியது. முட்டை, கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி விலைகள் பாரிய மாற்றத்திற்கு உட்பட்டது. இதனால் ஏழ்மை நிலையில் இருந்தோரின் நாளாந்தப் புரத உணவு நுகர்வில் தாக்கம் ஏற்பட்டது. பலர் மீண்டும் கடல் உணவு உண்ணவோ அல்லது மாட்டு இறைச்சி நுகர்விற்கோ திரும்பினர். தற்போது மீண்டும் ஓரளவு இயல்பு நிலைக்குத் திரும்பிக்கொண்டு இருந்தாலும் கடந்த 3 மாத காலத்தில் சிறுவர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் ஆகியோரில் இதன் தாக்கம் கணிசமாக அவதானிக்கப்படுகிறது.

தற்போது உணவு இயல்பு நிலைக்குத் திரும்பிக்கொண்டு இருந்தாலும் கால்நடை வளர்ப்போர் ஒரு திட்டமிட்ட அடிப்படையில் செயற்பட முடியாத தன்மை நோக்கத்தக்கதாகவே உள்ளது. இதனால் சிறிய உற்பத்தியாளர்கள் தங்கள் நடவடிக்கைகளைத் திட்டமிட முடியாமல் உள்ளார்கள்.

ஒருநாள் குஞ்சின் விலை ஏற்றம், கால்நடை உணவின் விலை ஏற்றம் மற்றும் நுகர்வோரின் வாங்கும் திறன் குறைந்துள்ளமை ஆகியவை முக்கியமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை.

ஆழிப்பேரலை அனர்த்தம் நேரடியாகப் பாதித்த பிரதேசங்களில் குறிப்பிட்ட அளவு கால்நடைகளுக்கு ஏற்பட்ட அழிவு விபரம் திரட்டப்படாமை என்பது எதிர்கால திட்டவகுப்பிற்கும் மீள்கட்டுமானத்திற்கும் தடையாகவே உள்ளது.

3) மேட்டுநிலப் பணபயிர் உற்பத்திப் பிரதேசங்களும் கணிசமாகப் பாதிப்பிற்கு உட்பட்டுள்ளன. இதனால் யாழ்.மாவட்டத்தில் வடமராட்சிப் பிரதேச வெங்காயம், புகையிலை, மிளகாய் உற்பத்தியில் ஓரளவு தாக்கம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அடுத்துவரும் காலபோகத்தில் இவர்கள் எவ்வாறு தமது உற்பத்தி நிலங்களில் படிப்படியாக முயற்சிகளை ஆரம்பிக்க உள்ளார்கள் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இதற்கு பின்வரும் அவசர நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்கவேண்டும்.

I) மண்ணில் கடல் நீரினால் ஏற்பட்ட பௌதீக, இரசாயன மாற்றங்களைப் படிப்படியாக மீள பழைய நிலைக்குக் கொண்டுவரல் மற்றும் மண்ணின் உற்பத்தித் திறனை மீளக் கட்டியெழுப்புதல் இந்நடவடிக்கைகளுக்காக விவசாயிகளுக்கு அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும் எவ்வாறு ஒன்றிணைந்த திட்டத்தின் மூலம் ஊக்கம் வழங்கும் என்பது மிக அவசியமானதாகும்.

உதாரணமாக எவ்வாறு நீரை நிலத்தின் மேற்பரப்பில் கட்டி, பின்னர் அதனைத் திறந்துவிட்டு மண்ணை நீரினால் கழுவுதல் முறையில் இரசாயனப் பொருட்களை அகற்றல் முக்கிய முறையாகும். இம்முறை இடத்திற்கு இடம் மாற்றத்திற்கு உட்படும். இது கடல் மட்டத்திலிருந்தான ஏற்றம் மற்றும் வடிகால் வசதிகள் என்பனவற்றிற்கு அமைய மாறுபடும். சித்திரை சிறுமாரி மழைக்கு தயாராக வடிகால்களை துப்புரவு செய்து வைத்து முதல் மழையைக் கொண்டு முடிந்தளவு மேற்பரப்பு உவர்த் தன்மையை அகற்றத் திட்டம் வகுத்தல் அவசியம்.

அத்துடன், பெரும்போக நெற்பயிர்ச்செய்கைக்கு தற்போது திட்டம் வகுத்து உவர்த் தன்மையை தாங்கி வளரும் நெல்லினங்களைப் பெற உரிய நேரத்தில் திணைக்களங்கள் ஆவன செய்யவேண்டியது அவசியமானதாகும்.

இம்முறை அவ்வகை நெல் விதைகளுக்கு நாடளாவிய ரீதியில் பெரும் தேவை ஏற்படும். ஆதலால் வடகிழக்கு மாகாணம் முன்கூட்டியே இதற்கான ஆயத்தங்களை செய்ய வேண்டும்.

உற்பத்திக்குரிய நிலங்களை மீளப்பெறல் எனும் விடயத்தில் ஒன்றிணைந்த கொள்கை வகுப்பும், அமுலாக்கமும் தவிர்க்க முடியாததாகும்.

தற்போது பாதிக்கப்பட்ட நிலையில் உள்ள தென்னை மற்றும் பயன்தரும் மரங்கள் ஆகியவற்றைப் பாதிப்பிலிருந்து மீட்பதுடன் அவற்றின் உற்பத்தித்திறனையும் மீட்டெடுக்க வேண்டும்.

II) முடிந்த அளவு கடல் தாக்கத்திற்கு உட்படக்கூடிய பகுதியில் 100 மீற்றர் பாதுகாப்புப் பகுதியில் சமூக காடுவளர்ப்புத் திட்டங்களை முன்னெடுத்தல், இவை இயற்கை சீற்றத்தை ஓரளவு தணித்து கடல் அரிமாணத்தைக் குறைத்து நுண் சூழலை கட்டியெழுப்ப வழிவகுக்கும். இவ்விடயத்தில் வடமராட்சி கிழக்கு போன்ற பகுதிகளிலுள்ள கண்டல் பிரதேச வளங்கள் இயன்றளவு பாதுகாக்கப்படல் முக்கியமானது. இது ஒரு இயற்கை அரணாகவே தொழிற்படும்.

**III) கிணறுகள் மற்றும் நீர் நிலைகள்**

கிணறுகள் மற்றும் நன்னீர் நிலைகளின் உவர்த் தன்மை அதிகரிப்பானது பாரிய ஒரு விடயமாக உள்ளது. எதிர்வரும் காலத்தில் இதன் தாக்கம் கரையோரப் பிரதேச மக்களுக்குப் பெரும் சவாலாக அமையும். முக்கிய பொது குடிநீர் நிலைகள் இறைத்து சுத்தம் செய்தல் முறையில் ஓரளவு உவர்த்தன்மை குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் பழைய நிலைக்கு முற்றாக மீட்டெடுக்கப்படவில்லை.

இந் நீர் நிலைகளில் மிதமிஞ்சிய குளோரினிடல் பாரியதாக்கத்தை ஏற்படுத்துகிறது. மற்றும் குடிநீர் நிலைகள் உரிய பரிசோதனைகளுக்கு உட்படுத்தித்தர நிர்ணயம் மற்றும் நுண்ணுயிர்கள் காணப்படும் தன்மை ஆகியவை விஞ்ஞான ரீதியாக ஆய்விற்கு உட்படுத்தப்படாமை நோக்கப்பட வேண்டியது. வெளிநாடுகளால் அன்பளிப்பு செய்யப்பட்ட சுத்திகரிப்பு இயந்திரங்கள் ஓரளவு இதற்கு உதவினும் வடபகுதிக்கு இது போதியளவு கிடைக்காமை நோக்கப்படவேண்டும். இவை சரியாகக் கையாளப்படாதவிடத்து பல நீண்டகாலத் தாக்கங்கள் ஏற்படுவதுடன் குடிநீர் வளம் பாரிய பாதிப்பிற்கு உட்படுத்தப்படும் என்பது நாம் நோக்க வேண்டியது அவசியம். கடற் பாதிப்பிற்கு அண்மித்த பிரதேச நீர்நிலைகளில் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள மாற்றமும் நோக்கப்பட வேண்டியது.

மீள்குடியேற முனையும் மக்களின் தற்காலிக அல்லது நிரந்தர வதிவிடங்களில் முடிந்தளவிற்கு வதிவிடப்பயிர்களை மற்றும் பூவரசு, சவுக்கு போன்ற பயனுள்ள தாவரங்களையும் பெரும்போக காலத்தில் திட்டமிட்டு மீள்நடுகைக்குட்படுத்தி மனிதனின் வதிவிட அமைதியான வாழ்விற்கும், வாழ்வாதார விருத்திக்குமான வழியை ஏற்படுத்த முடியும். குறைந்த உள்ளீட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வீடுகளில் வதிவிட வேளாண்மையை வரும் காலபோகத்தில் ஊக்குவிக்கலாம் இது ஒரு உளவள சிகிச்சையாகவும் அமையும்.

**VI) கரையை அண்டிய கடல் வளம் பேணல்**

சில பிரதேசங்களில் கடற்கரைகளில் தரைப்பகுதி உயர்ந்துள்ளது பற்றி பேசப்பட்டாலும் இவை பற்றி நாம் தகுந்த ஆய்வுகள் இன்றி இருப்பதைக் காணமுடிகிறது. இதனால் கடலடி தொழில் முனைவோர் பாதிக்கப்படுவதுடன், எமது வடக்குக் கிழக்குப் பிரதேசக் கடல்வளமும் மாற்றத்திற்கு உட்படுகிறது. அத்துடன், கடல் அரிமாணத் தடுப்பு நடவடிக்கைகளில் கடலடித் தடுப்புச் சுவர் அமைத்தலிலும் கடல் நுண்சூழல் மாற்றங்கள் நோக்கப்படல் வேண்டும்.

கடற்கரைகளை அண்டிய தடுப்பு சுவர் அமைத்தல் கருங்கற்களை/ முருகைக்கற்களைக் கொண்டு அமைத்தல் மற்றும் நிபுணர்களால் வடிவமைக்கப்படும் பரிந்துரைத் திட்டத்திற்கு அமைய முன்னெடுக்கப்பட்டாலே நாம் எமது கடலடி இயற்கை வளத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இங்குள்ள தாவரம், விலங்குகள் ஆகிய உயிரினங்கள் பேணப்பட்டு அவை மனிதனுடன் சமநிலைக்கு மீள்வது மனிதனது உளப்பாதிப்பிலிருந்தான மீளுகைக்கு முதற்படியாக அமையும்.

இதில் அனைவரும் கடல் சார்ந்த பிரதேசம், அதன் மக்கள், அதன் வளம் அங்குள்ள வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பேணுவதன் மூலம் மற்றும் அரசியல், பொருளியல், சமூக மீள்கட்டுமானத்தைக் கருத்தில் கொண்டு செயற்படுவதன் மூலமுமே நாம் அப்பிரதேச மக்களுக்கு உண்மையாக உதவுவதுடன் எதிர்கால சந்ததியையும் நிலை நிறுத்த முடியும்.

கடலோர கிராம மீள்கட்டுமான நடவடிக்கையில் நாம் மக்களின் பங்கேற்புடன் தற்சார்பு கொள்கை முன்னெடுப்பை முன்வைத்தாலே நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கு அது உதவும் "உணவு உத்தரவாதம் என்பது நிவாரண உணவு வழங்கல் அல்லது சந்தையில் உணவுப் பொருட்களின் கையிருப்பை உயர்த்திச் செல்வதுடன் முடிவுறும் விடயமல்ல. எல்லாப் படி முறைகளிலும் உணவு மனிதனால் நுகரப்பட்டு அவனிடம் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தல் வரை அனைத்து விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒரு அணுகு முறையாகும்".

# பாரத் நிறுவனத்துக்கு பெ.கூ.தா. பங்குகள்

## புதிய பிரேரணை சமர்ப்பிக்க முடிவு

(கொழும்பு)

தற்போது திறைசேரி வசமுள்ள அரசுக்கு சொந்தமான பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 1/3 பங்கினை தற்போதைய சந்தை விலைப்படி இந்தியாவின் பாரத் நிறுவனத்திடம் கையளிக்கும் பணிகள் இடம்பெற்றுக் கொண்டுள்ள வேளையில் ஜனாதிபதி வெளிநாட்டுப் பயணத்தை முடித்து நாடு திரும்பியதையடுத்து மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இது தொடர்பில் புதிய பிரேரணையொன்றைக் கொண்டு வரவுள்ளார்.

திறைசேரியின் பொறுப்பிலுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 1/3 பங்கினை பாரத் கம்பனியிடம் கையளிக்க அரசு எடுத்த முடிவுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்த காரணத்தினால் மாற்று யோசனைகள் அடங்கிய பிரேரணைகளை அமைச்சர் சமர்ப்பிக்கவுள்ளார்.

இப்புதிய பிரேரணைகளின்படி நிறுவனத்தின் 10% தொழிலாளர்களுக்கும் 5% தரகர்களுக்கும் 33% பங்குச்சந்தைக்கும் வழங்கப்படவுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களின் பாதுகாப்பு வேலையில்லாப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இப் புதிய பிரேரணை கொண்டுவருவது அரசாங்கத்திற்கு அத்தியாவசியமாக இருக்கும்.(க-6)

## புதிய நிர்வாக சபை

(கோண்டாவில்)

பனை அபிவிருத்திச் சபையின் பணியாளர் நலன்புரிச் சங்கத்திற்கான புதிய நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது.

அதற்கமைய தலைவராக நாகமணி மகேந்திரலிங்கமும் உபதலைவ ராக கந்தசாமி விசுவநாதரும் செயலாளராக சத்தியநாதன் சத்தியராஜனும் உபசெயலாளராக ஈஸ்வரானந்தனும் பொருளாளராக திருமதி ஸ்ரீதேவி தர்மேந்திரவும் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் ஏழு பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (க-130)



தென்புலோலி புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கக் கனடாக்கிளையினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அனுப்பி வைத்த 4 இலட்சம் ரூபாவுக்கான காசோலையை பழைய மாணவர் சங்கத்தலைவர் எஸ்.கதிர்காமநாதன் சுனாமி அனர்த்தப் புனரமைப்புச் செயலணி முதன்மை இணைப்பாளர் எஸ்.பாலையாவிடம் கையளிக்கிறார். வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். இன்பன் உட்பட பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: பரு.நிருபர்)

# தேர்ந்தெடுத்த பெயரும், அதற்கு கொடுக்கப்பட்ட விளக்கமும் உலக சமாதானத்திற்கு புதிய தெம்பினைக் கொடுக்கிறது

## பாப்பரசருக்கான வாழ்த்துச் செய்தியில் திருமலை-மட்டக்களப்பு ஆயர்

(திருகோணமலை)

**புதிய பாப்பரசராகத் தெரிவு செய்யப்பட்ட 16ஆம் ஆசீர்வாதப்பரின் பணி மிகுந்த சவால் நிறைந்ததாகவேயுள்ளது. இவர் தேர்ந்தெடுத்த பெயரும், அதற்கு அவர் கொடுத்த விளக்கமும் உலக சமாதானத்திற்கான புதிய தெம்பினைக் கொடுக்கிறது என திருமலை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை குறிப்பிட்டுள்ளார்.**

புதிய பாப்பரசரின் தெரிவு குறித்து வெளியிடப்பட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகெங்கும் பரந்து 110கோடி கத்தோலிக்க மக்களின் தலைவராகிய பரிசுத்த பாப்பரசர் 2ஆம் அருள் சின்னப்பர் கடந்த 2ஆம் திகதி மறைந்ததையிட்டு உலகின் பார்வையெல்லாம் வத்திக்கான் நகர் நோக்கி திரும்பியது. அவரது மறைவின் பிரியாவிடை நடைபெற்ற கடந்த 8ஆம் திகதி தொட்டு திருச்சபையின் அடுத்த தலைவர் யார் என்கின்ற கேள்விகளும். யூகங்களும் அங்கொன்றும். இங்கொன்றுமாக எழத்தொடங்கின. இத்தகைய யூகங்களுக்கும் கேள்விகளுக்கும் விடை கிடைத்தற் போல் கர்தினால்கள் தங்களது இரகசிய வாக்கெடுப்பின் இரண்டாம் நாளில் புதிய திருத்தந்தையாக ஜேர்மனியைச் சேர்ந்த, கர்தினால் குழுக்களின் தலைவராகிய கர்த்தினால் ஜோசப் ரட்சிங்கரைத் தெரிந்தெடுத்து முறைப்படி கடந்த 19ஆம் திகதி உலகிற்கு உரோமை சிஸ்ரன் சிற்றாலய புகை போக்கியூனுடாக வெண்புகை அனுப்பியும், ஆலய மணிகளை ஒலித்தும் அறிவித்தார்கள்.

புதிய திருத்தந்தையாகத் தெரிவு செய்யப்பட்ட கர்த்தினால் ஜோசப் ரட்சிங்கர் 16-04-1927 இல் ஜேர்மனியில் பிறந்தார். அவர் 29.06.1951ஆம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தொடர்ந்து 1977ஆம் ஆண்டு முனிச் நகர பேராயராக நியமிக்கப்பட்டார். அதே ஆண்டில் திருத்தந்தை 6ஆம் சின்னப்பரால் கர்த்தினாலாக உயர்த்தப்பட்டார். 1981ஆம் ஆண்டு திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் இவரை வத்திக்கான் நிர்வாகியாக நியமித்தார். 1998-ல கர்தினால் குழுவின் துணைத் தலைவராகவும். 2002இல் கர்தினால் குழுவின் தலைவராகவும் நியமித்தார். இன்று 16ஆம் ஆசீர்வாதப்பர் என்கின்ற நாமத்துடன் திருத்தந்தையாக நியமிக்கப்பட்டார். தனது புதிய மேய்ப்புப்பணியினை அதிகாரபூர்வமாக கடந்த 24ஆம் திகதி அன்று திருப்பலியின்போது ஏற்றுக்கொண்டார்.

மறைந்த திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பருடன் நெருக்கிய தொடர்புகொண்ட திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பரின் பணி மிகுந்த சவால் நிறைந்ததாகவேயுள்ளது. இவர் தேர்ந்தெடுத்த பெயரும், அதற்கு அவர் கொடுத்த விளக்கமும் உலக சமாதானத்திற்கான புதிய தெம்பினைக் கொடுக்கின்றது. இவருக்கு முன்னதாக இவரது பெயரைச் சூடிய 15ஆம் ஆசீவாதப்பர் 1ஆம் உலக மகா யுத்தத்தின் போது திருத்தந்தையாகப் பணிபுரிந்தவர். மேலும் அவர் உலக சமாதானத்திற்காக அக்கால கட்டத்தில் கடுமையாக உழைத்தவர். அதனை மனதிற்கொண்டே நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளவும் உலக சமாதானத்திற்காக உழைக்கவுமே அப்பெயரைத் தெரிவு செய்தமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

தமது பதவியேற்பு ஆராதனையின் போது திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பர் கூறியுள்ள வார்த்தைகள் அவரது பணியினை வெகுவாக கோடிட்டுக் காட்டுகின்றன. தன்னை ஆண்டவரின் பல வீனமான சேவகன் எனக் குறிப்பிட்டவர் தன் முன்னால் உள்ள பணி தனி மனிதனின் வல்லமைக்கு அப்பாற்பட்டதெனவும், இதனை நிறைவேற்றுவதற்காக தனக்கு உதவுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும் தான் தனது விரும்பத்தின்படி தனது எண்ணங்களின்படி நடக்கப்போவதில்லையெனவும் மாறாக கிறிஸ்தவ திருச்சபையுடன் இணைந்து முழு உலகத்தையும் இறைவனின் விருபபத்தையும் செவிமடுக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இறைவிருப்பத்தை நிறைவேற்ற முன்வந்துள்ள எமது ஆன்மீகத் தலைவரும் வழிகாட்டியுமாகிய 16ஆம் ஆசீர்வாதப்பரின் பணிகள் செவ்வனே இவ்வுலகில் நடந்தேற எங்களது மனப்பூர்வமான வாழ்த்துக்களை உலகு வாழ் கத்தோலிக்கருடன் சேர்ந்து தெரிவித்துக்கொள்கின்றோம். அவரது பணியில் ஒரே விசுவாசத்தில் இணையும். திருச்சபை என்கின்ற நாமத்தில் என்றும் விசுவாசமாக செயற்படுவோம் எனவும் உறுதி படக்கூறி நிற்கின்றோம். அவர் அப்பணியில் எதிர்கொள்ளும் சவால்களை இறை ஆவியின் வல்லமைகொண்டு வெற்றிபெற எல்லாம் வல்ல இறைவனையும் பிரார்த்திக்கின்றோம் எனவும் அவ் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (மு-4)

# சிறைச்சாலைகளை விஸ்தரிப்பதிலும் பார்க்க குற்றவாளிகள் உருவாவதை தடுப்பதே சிறந்தது

## என்கிறார் நீதி அமைச்சர் டி.ஜே.செனவிரத்ன

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் சிறைக் கைதிகள் நிரம்பி வழிகின்றமையால் 50 சதவிதமான சிறைக் கைதிகளுக்கு போதிய இடவசதிகளில்லை.

இவர்களுக்கு இடவதிகளை ஏற்படுத்துவதனை விடுத்து, சிறைச்சாலைகளுக்கு சிறைக்கைதிகள் வருவதை தவிர்க்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் இதற்காகத்தான் மாவட்டம் தோறும் சமூக சீர்திருத்த பிரிவுகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

இவ்வாறு கூறுகிறார் நீதி அமைச்சர் டி.ஜே.செனவிரத்ன இலங்கை சிறைச்சாலைகளில் 25ஆயிரம் சிறைக்கைதிகள் பல்வேறு குற்றசெயல்களின் பேரில் தண்டனை பெற்று வருகின்றனர்.

இவர்களில் தண்டப்பணம் செலுத்த முடியாது சிறைத்தண்டனைகளை அனுபவித்து வருபவர்களே அதிகம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இரத்தினபுரி நீதிமன்ற கட்டடத்தொகுதியில் மாவட்ட சமூக சீர்திருத்த பிரிவு ஒன்றினை வைபவ ரீதியாக திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில், சிறிய குற்றங்களைப் புரிந்து தண்டப்பணம் செலுத்த முடியாது சிறையில் இருப்பவர்களுக்கு இந்த சீர்திருத்தப் பிரிவினால் பெரும் நன்மை கிடைக்கும்.

அது மட்டுமல்லாமல் நீண்ட காலமாக சிறையில் குற்றவாளிகளாக இருக்கும் இவர்கள் பாரிய குற்றவாளிகளுடன் சேர்ந்து மேலும் பல குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இன்று சிறைச்சாலையில் உள்ள சிறைக்கைதிகளுக்கு வருடந்தோறும் பெருந்தொகை நிதியை செலவு செய்கின்றது.

இந்த சீர்திருத்தப் பிரிவு மூலம் நாட்டில் குற்றங்களைத் தடுக்க முடியும். இந்த சீர்திருத்தப்பிரிவு கடந்த காலங்களில் அமைக்கப் பட்டபோது அது நடைமுறைப் படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் தோன்றின.

1999ஆம் ஆண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் வந்த அரசாங்கம் இதனை நடைமுறைப்படுத்தவில்லை. நாட்டில் சிறைக் கைதிகளைக் குறைப்பதன் மூலம் சிறைக்கைதிகளுக்குச் செலவழிக்கப்படும் பெருந்தொகை நிதி குறைவடையும் அத்தொகையை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்த முடியும் என்றார்.

இக் கூட்டத்தில் நீதி சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வரம்லத் உட்பட பலரும் உரையாற்றினர். (க)

# விஷேட தெரிவுக் குழுவின் அறிக்கையில் அனைத்து தரப்பினரதும் ஆலோசனைகள்

## உள்ளடக்கப்படும் என்கிறார் மஹிந்த சமரசிங்க

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் மே மாதம் இறுதியில் முன்வைக்கப்படவுள்ள இயற்கை அனர்த்தினால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக்கொள்வது தொடர்பான பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் அறிக்கையில் அனைத்து தரப்பினரினது யோசனைகளும் உள்ளடக்கப்படவுள்ளதாக தெரிவுக்குழுவின் தலைவர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கைக்காக சுனாமி அனர்த்தததின் பின்னர் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்ட மாவட்ட செயலாளர்கள் மற்றும் சமயத் தலைவர்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கூடிய இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளும் விசேட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தங்களைக் குறைத்துக்கொள்வது தொடாபான விசேட பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள் மதத் தலைவர்கள் உட்பட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது பலவிடயங்கள் குறித்தும் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு கிடைத்தது எதிர்காலத்திலும் இவ்வாறு முக்கியமானவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி மே மாதம் இறுதியில் எமது அறிக்கையை பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளோம் என மஹிந்த அமரசிங்க மேலும் தெரிவித்தார். (ந-8)

# நேர்முகத் தேர்வின் அடிப்படையில் நிரந்தர நியமனத்தை வழங்குக!

## பட்டதாரி பயிலுநர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரச துறை வேலைவாய்ப்புக்களில் பட்டதாரிகளை உள்ளீக கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி பெற்று வரும் பட்டதாரிகள் தமக்கு பரீட்சை நடாத்தாது நேர்முகத்தேர்வின் அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது விடயத்தை வலியுறுத்தி யாழ்.மாவட்ட பட்டதாரி பயிலுநர் சங்கம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

அத்துடன் இம்மகஜரின் பிரதிகள் முகாமைத்துவ சேவைகள் திணைகளத்தின் பணிப்பாளர் நாயகம், வட-கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர், வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

**கையளிக்கப்பட்டுள்ள இம் மகஜரின் விபரம் வருமாறு:-**

**அரசாங்கத்தினால் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் முகமாக மேற்கொள்ளப் பட்ட திட்டத்தின் அடிப்படையில்** பல்வேறு அரச திணைக்களங்களில் பட்டதாரிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். பயிற்சியின் பின்னர் மே மாதப்பகுதியில் நிரந்தர நியமனத்திற்கு உள்வாங்கப்படுவார்கள் என அரசினால் உறுதிமொழி வழங்கப்பட்டது.

ஆனால், தற்போது அவ்வாறு பயிற்சி பெறும் பட்டதாரிகள் தமது எதிர்காலம் கேள்விக்குறியாகி விடுமா? என்ற நிலையில் கவலையும் விரத்தியும் அடைந்துள்ளனர். பட்டதாரிகளை நிரந்தர சேவையில உள்வாங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுவருகின்ற நிலையில் திணைக்களங்கள் /அமைச்சுக்கள் ஒரு சில நேர்முகப் பரீட்சை மூலமும ஒரு சில போட்டிப் பரீட்சையின் மூலமும் தெரிவு செய்யப்படவுள்ளதாக கூறப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, வடக்கு-கிழக்கு மாகாண பொது சேவைகள் ஆணைக்குழு நிர்வாகத்துறை மற்றும் கல்வித்துறைக்கு போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவதாக கூறப்படுகின்றது. இதன் காரணமாக பயிற்சி பெறும் பட்டதாரிகளாகிய நாம் தங்களுக்குப் பின்வரும் கோரிக்கைகளை முன் வைக்கின்றோம்.

பயிற்சி பெறும் பட்டதாரிகளாகிய எமக்கு பரீட்சை நடாத்தாது நேர்முகத் தேர்வு அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்கப்படல் வேண்டும்.

அதாவது, பட்டதாரி பயிலுநர்களாகிய எமக்கும் மற்றும் புதிதாக பட்டதாரிகளாக வெளியேறியவர்களுக்கும் ஒரே போட்டிப் பரீட்சைக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் நியமனம் பெறுவதற்கு ஏதுவாகவும் மற்றவர்கள் நியமனத்தில் புறக்கணிக்கப்படவும் வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

பட்டதாரி பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்பட்ட அனைவருக்கும் நேர்முகப்பரீட்சை அடிப்படையில் ஒரே திகதியில் நிரந்தர நியமனத்திற்கு உள்வாங்கப்படல் வேண்டும்.

பட்டதாரி பயிலுநர்களாகிய எமக்கு நேர்முகத்தேர்வுகளுக்கு பங்குபற்றுவதற்கு கடமை லீவினை பெற்றுக்கொள்ள வழிவகை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

எனவே, எமது இக் கோரிக்கைகளை தங்களின் கவனத்தில் கொண்டு உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு எமக்கு விரைவாக சாதகமான பதிலினை பெற்றுத்தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம் என அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந)

# இன்று ஒரு தகவல்

## மனித இயல்புகள்

இந்த உலகில் உயிரினங்களுக்கு என்று ஒரு குணம் இருக்கிறது. ஒரு நாய் இருக்கிறது. அதன் குணம் என்ன வென்று நமக்குத் தெரியும். ஒரு கழுதையின் குணம் என்னவென்று நமக்குத் தெரியாதா? ஒரு குரங்கு என்னவெல்லாம் செய்யும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் ஒரு மனிதனின் குணம் என்னவென்பதை நம்மால் கூறமுடியாது. இவன் சில நேரம் நாய் மாதிரி இருப்பான். சிலநேரம் குரங்குமாதிரி நடந்துகொள்வான்.

எந்தநேரத்தில் எந்த குணத்தில் இருப்பான் என்று கண்டு பிடிப்பது கஷ்டம் பேச்சுக்கொடுத்தால் தான் தெரியும். பதில் வரும் விதத்தை வைத்தே "ஓகோ! இப்போது இந்த அவதாரத்தில் இருக்கிறார். நாம்தான் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும்" என்று முடிவு செய்து கொள்ளலாம். அது சரி! மனிதன் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறான்? ஒரு புராணக் கதையைக் கேட்டீர்களானால் அதன்பின் இப்படி கேள்வி கேட்கமாட்டீர்கள்.

ஆண்டவன் என்ன செய்தாராம் ஜீவராசிகளைப் படைத்த பின் அவற்றின் ஆயுட்காலத்தை முடிவு செய்யவேண்டியிருந்ததாம். அவர் எல்லா ஜீவராசிகளையும் சமமாகத்தான் உண்டாக்கியிருக்கிறோம். இதில் ஒவ்வொன்றுக்கும் ஏன் வயது வித்தியாசம்? எல்லாம் இந்த உலகில் ஒரே மாதிரியே இருந்துவிட்டுப் போகட்டும் என்று முடிவு செய்தார். அதனால் எல்லாவற்றுக்கும் 30 வருட ஆயுட்காலம் என்று முடிவு செய்தார்.

இதைக் கேள்விப்பட்டவுடன் நான்கு ஜீவராசிகளுக்கு மட்டும் இதில் திருப்தி ஏற்படவில்லை. கழுதை, நாய், குரங்கு மனிதன் இவை தான் நான்கும் உடனே பகவானிடம் முறையிட விரும்பினார்கள். அதற்கு ஒரு வக்கீல் தேவைப்பட்டார். வேறு யார்? நேராக நாரதரிடம் சென்றனர். அவர் இவர்களின் வழக்கை எடுத்துக்கொண்டு இவர்களைக் கடவுளிடம் அழைத்துப் போய் நிறுத்தினார். இவையாவும் ஒவ்வொன்றாக முறையிட ஆரம்பித்தது.

முதலில் கழுதை முன்னால் வந்து நின்றது. "இதோ பாருங்கள் கடவுளே! நானோ நாள்முழுதும் பொதி சுமந்து காலம் தள்ளப் போகிறேன் நீண்டநாள் கஷ்டப்பட்டு பொதி சுமக்கும் எனக்கு 30வருட ஆயுள் மிக அதிகம். கொஞ்சம் குறைந்தால் பரவாயில்லை" என்றது. பகவான் பார்த்தார். "நீ கூறுவது நியாயம் தான்" என்றுகூறி அதன் ஆயுளை 18 வருடமாகக் குறைத்து விட்டார்.

அடுத்ததாக நாய்வந்து நின்றது. "சாமி! எனது பிழைப்பே நாய் பிழைப்பு! எனக்கு ஏன் 30 வருடம் அவ்வளவு நாள் நான் கஷ்டப்படவேண்டுமா?" என்றது. 'அதுவும் சரிதான்' என்று நினைத்தார் கடவுள். "சரி. உனது ஆயுளை 12 வருடமாகக் குறைத்து விடுகிறேன்" என்றார். நாய் சந்தோஷமாக வாலை ஆட்டிக் கொண்டு அங்கிருந்து போய்விட்டது.

அடுத்ததாக குரங்கு வந்து நின்றது. "சுவாமி! எனது சேஷ்டைகள் எப்படி என்று உங்களுக்கே நன்றாகத் தெரியும். எப்போது பார்த்தாலும் மரத்திலும் கிளையிலும் தொங்கிக் கொண்டிருக்கப்போகிறேன். எனக்கு ஏன் முப்பது வருடம்?" என்றது. சுவாமி பார்த்தார். சரி என்று அதையும் பத்து வருடமாகக் குறைத்து விட்டார். குரங்கிற்கு மிகுந்த சந்தோஷம். ஒரே தாவாகத் தாவி அங்கிருந்து வந்துவிட்டது.

கடைசியாக,மனிதன் கடவுள் முன் போய் நின்றான். "ஈஸ்வரா! என்க்கு 30 வருடம் பத்தாது! நான் இந்த உலகில் நிறைய சாப்பிடவேண்டும், உறங்கவேண்டும் அதனால் எனது ஆயுளை அதிகரிக்கச் செய்தால் பரவாயில்லை" என்றான். கடவுள் யோசித்தார். ஆயுளை அதிகப்படுத்துவதென்றால் அதில் சில பிரச்சினைகள் இருக்கிறதே. பூமியில் இடப் பிரச்சினையெல்லாம் வரும் என்று யோசித்தார்.

அதைப் பார்த்த உடனே மனிதனே அதற்கு ஒரு வழியையும் சொன்னான். "எதற்காக யோசிக்கிறீர்கள்? கழுதையில் குறைந்த 12 வருடம். நாயில் குறைந்த 18 வருடம். குரங்கில் குறைந்த 20 வருடம் எல்லாவற்றையும் சேர்த்து என்னிடம் தந்தால் போதும். உங்களுக்கும் கணக்கு சரியாகவரும்" என்றான். "சரி அப்படியே ஆகட்டும்" என்றார் கடவுள்.

அதன் பலன் என்ன? என்பது இப்போதுதான் புரிகிறது. ஏற்கனவே அப்படி முடிவானதனால் தான் இன்று மனிதன் 30 வருடம் வரையில் சந்தோஷமாக இருக்கிறான். அவனுக்கென்று விதிக்கப்பட்ட ஆயுள் இது. அடுத்த 12 வருடம் கழுதையிடம் வாங்கியது. அதுதான் கழுதை மாதிரி குடும்பபாரத்தை சுமக்கிறான். அடுத்த 18வருடம் நாயிடம் வாங்கியது. அதுதான் அந்த சமயம் சொத்துச் சேர்ப்பதற்காகவோ அல்லது சொத்தைக் காப்பாற்றுவதற்கோ நாய் மாதிரி அலைகிறான். இல்லாவிட்டால் காவல் காக்கிறான். அடுத்த 20 வருடம் குரங்கிடம் வாங்கியது. வயதாகி மரியாதையோய் யார் என்ன சொன்னாலும் அவர்கள் கூறியபடி ஆடவேண்டிய நிலைமை.

அன்றைக்கு வாங்கிய ஆயுள் கடன் இன்று ஆயுள் முழுவதும் மனிதனை என்ன பாடுபடுத்திக் கொண்டிருக்கிறது பார்த்தீர்களா?

ஒரு வாரத்திற்கு முன்பாக எனது நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். "என்னசார்? கொஞ்சநாட்களாக உங்களைக் காணவே முடியவில்லை?" என்றேன். அவர் கொஞ்சம் எரிச்சலுடன் என்னை முறைத்துப் பார்த்துவிட்டுச் சொன்னார். "வீடு ஒன்று கட்ட ஆரம்பித்தேன். காசுக்காக நாய் மாதிரி அலைந்து கொண்டிருக்கிறேன்" என்று கூறிவிட்டு வேகமாக ஓடினார். இதற்கு என்ன அர்த்தம்? அவர் அந்த மூன்றாவது நிலையில் இருக்கிறார் என்று அர்த்தம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தொண்டர் ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனத்திற்கு விதிக்கப்பட்டுள்ள கஷ்ட மற்றும் அதிகஷ்டப் பாடசாலை நிபந்தனை நீக்கப்பட வேண்டுமென இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் யுத்த சூழலில் வேதனமின்றி ஆற்றிய தொண்டர் ஆசிரியர்களின் சேவையை கஷ்ட, அதிகஷ்டப் பாடசாலை என்று வகைப்படுத்தி புறக்கணிப்பது அநீதியாகும்.

அத்துடன், ஏனைய மாகாணங்களைப் போல் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோராமல் முன்னைய பட்டியலைக்கொண்டு நேர்முகப் பரீட்சை நடாத்த வடக்கு- கிழக்கு மாகாண கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதும் நீதியானதாகும் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் விடுத்துள்ள கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள இரண்டாயிரத்து இரண்டு பாடசாலைகளில் ஆயிரத்து 34 பாடசாலைகள் மாத்திரமே கஷ்ட,அதிகஷ்டப் பாடசாலைகளாக அட்டவணைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆனால் ஏனைய மாகாணத்தை விட இந்த மாகாணத்தில் அனைத்துப் பாடசாலைகளிலும் அதி கூடிய ஆசிரிய வெற்றிடங்கள் நிலவுகின்றன.

எனவே கஷ்ட, அதிகஷ்டப் பாடசாலை நிபந்தனை நீக்கப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது. (ந-4)

# றெஜினோல்ட் கூரேயின் பதவியைப் பாதுகாக்க பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவோம்

## மாகாண முதலமைச்சர்கள் கூட்டமைப்பு

(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேயின் பதவியைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றப் போவதாக மாகாண முதலமைச்சர்கள் தெரிவித்துள்ளார்கள்.

முதலமைச்சர் றெஜினோல்ட் கூரேக்கு எதிரான சதித் திட்டங்களைத் தோற்கடித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பலத்தை வலுப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயலாற்ற இருப்பதாக வட மத்திய, மத்திய வடமேல் மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கூட்டமைப்பு அரசாங்கத்தையும் மாகாண சபைகளையும் பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பும் கடமையுமாகும். அதற்காக எத்தகைய அர்ப்பணிப்பும்செய்ய நாம் தயாராக இருக்கின்றோம்.

இவ்வாறான ஒரு நிலைமையில் ஐக்கியமாக செயற்பட வேண்டும். மக்களின் வாக்குகளினால் ஆட்சிக்கு வந்த கூட்டமைப்பு அரசாங்கத்தையும் மாகாண சபைகளையும் ஐக்கிய தேசியக் கட்சியின் தந்திரோபாயங்களினால் வீழ்த்தமுடியாது.

இந்த தந்திரோபாயங்களை இனங்கண்டு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் செயற்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் வடமத்திய மாகாண முதலமைச்சர் பேண்டி பிறேம்லால் திஸாநாயக்க, மத்தி மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, வடமேல் மாகாண முதலமைச்சர் சட்டத்தரணி அத்திய விஜயசிங்க, சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மகிபால ஹேரத், தென் மாகாண முதலமைச்சர் சாந்தவிஜயபால சில்வா ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். (ந-8)

# தவறவிடப்பட்ட 27 அ. அட்டைகள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில்!

## உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ் நிலையத்தில் பொதுமக்களால் தவறவிடப்பட்ட 27 தேசிய அடையாள அட்டைகள் மற்றும் ஆமி விசேட அடையாள அட்டைகள் உள்ளன. உரியவர்கள் இவற்றை ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தையா சந்திரசேகரா (321925065v), சொர்ணவடலி ஒழுங்கை கொக்குவிலைச் சேர்ந்த தர்மராஜா நிலோஜன் (811241768v), வேலணை கிழக்கைச் சேர்ந்த சிவராசா சாந்தினி(626504124v), மல்லாகத்தைச் சேர்ந்த சரவணமுத்து கனகசபை (071980138v), தருமபுரம் கிழக்கு கிளிநொச்சியைச் சேர்ந்த பொன்னையா சகிதா (788014538v), பிராம்பற்று சங்கானையைச் சேர்ந்த நவரத்தினம் ஆறுமுகம் (552952251v), 2ஆம் குறுக்கு வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் றொகான் (850153680v),

வீச்றோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தசாமி சின்னவி, ஆஸ்பத்திரி வீதி கொட்டடியைச் சேர்ந்த சீவரத்தினம் மணிபல்லவன் (772763760v), அரியாலையைச் சேர்ந்த மாணிக்கம் சுமதி (676923144v), திருகோணமலையைச் சேர்ந்த சின்னத்தம்பி ரகுலேந்திரன் (503023288v), புங்குடுதீவைச் சேர்ந்த தர்மலிங்கம் இரத்தினராசா (462912226v), மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறையைச் சேர்ந்த கிட்டினன் பொனிப்பாஸ் (620403938v), அல்லப்பிட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சாந்தலில் (520124225v), சந்தா தோட்டம் புலோலியைச் சேர்ந்த சிற்றம்பலம் நல்லம்மா (335412842v), சாவகச்சேரியைச் சேர்ந்த மக்லண்ட் டானியல் அற்புதராசா (481843090v) ஆகியோரது தேசிய அடையாள அட்டைகள் பொலிஸ் நிலையத்தில் உள்ளன.

அத்துடன்,வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னராசா சதீஸ்வரன் (0902017244), தண்ணீர் தாங்கி வீதி குருநகரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை ஜொலி ரபிரகாம், கோவில் வீதி நல்லூரைச் சேர்ந்த சுப்பிரமணியம் யோகேஸ்வரி(0902033185), ஆடியபாதம் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னையா நாகரத்தினம், ஓட்டுமடம் யாழ்ப்பாணப்பணத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சுதாகரன்(0901012475),ஆறுகால்மடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகராசா வசந்தகுமார், பெரியவிளான் இளவாளையைச் சேர்ந்த திருச்செல்வம் இராசலட்சுமி (090501814),கடற்கரை வீதி குருநகரைச் சேர்ந்த பெனற்யோகிக்சன் றீற்றம்மா (0901003457),

தோப்புவீதி மட்டுவிலைச் சேர்ந்த சிவக்கொழுந்து நாகராசா (091020965), ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் பபேசன்(091307222),சந்தாதோட்டம் புலோலியைச் சேர்ந்த சிற்றம்பலம் நல்லம்மா (090807228) என்பவர்களது விசேட அடையாள அட்டைகளும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் உள்ளன.

உரியவர்கள் ஆதாரம் காட்டி தத்தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். (ந-19)

# மேல்மாகாண சபையை ஒத்திவைப்பதால் குற்றச்சாட்டுகளை மறைக்க முடியுமா?

## -லக்ஷ்மன் அபேய குணவர்த்தன

(கொழும்பு)

மேல் மாகாண சபையின் அமர்வை மூன்று வார காலப் பகுதிக்கு ஒத்திவைப்பதன் மூலம் முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே மீதான குற்றச்சாட்டுக்களை மறைக்க முடியாது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் மேல் மாகாண சபை குழுக்களின் தலைவர் லக்ஷ்மன் அபேய குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 13ஆவது சரத்தின் படி ஆளுநர் ஒருவருக்கு மகாணசபையைக் கலைப்பதற்கும் மாகாண சபையின் ஆயுட்காலத்தைத் தீர்மானிக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே மாகாணசபையினை அத்துமீறி உடைத்துக்கொண்டு அங்கு கூட்டங்களை நடத்தவிருக்கின்றோம்.


அத்தோடு ஆளுநருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து அவரைப் பதவியில் இருந்து விலக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் லக்ஷ்மன் அபேய குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

இந்த நிலையில் தமக்கு றெஜினோல்ட் கூரே என்ற தனிமனிதனை விட மக்களுக்கு சேவையாற்றக் கூடியவர்களே தேவை என்று ஜே.வி.பியின் மேல் மாகாணசபைக் குழுக்களின் தலைவர் வர்ணகீர்த்தி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆளுநருக்கு மாகாணசபையினை ஒத்திவைக்க அதிகாரமிருக்கின்றது என்றாலும் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானமானது மாகாணசபைக்கு எதிரானது அல்ல. முதலமைச்சருக்கு எதிரானது. எனவே தனிமனிதனுக்காக மாகாண சபையின் அமர்வை ஒத்திவைத்தமையினை ஜே.வி.பி எதிர்க்கின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

# சிரிய படைகளின் வெளியேற்றத்தை முழுமையாக உறுதிசெய்ய முடியாது

## -கொபி அனான்



லெபனானில் இருந்து அனைத்து சிரிய நாட்டுத் துருப்பினரும் வெளியேற்றப்பட்டுள்ளமை தொடர்பாக தற்போது உறுதியாகக் கூறமுடியாது என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் வேண்டுகோளுக் கிணங்க அனைத்து சிரிய நாட்டுத் துருப்பினரும் லெப னானில் இருந்து முழுமையாக வெளியேற்றப்பட்டுள்ள தாக சிரியாவில் இருந்து கடிதம் ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

லெபனானில் உள்ள அனைத்து வெளிநாட்டுத் துருப்பினரும் அங்கிருந்து வெளியேற்றப்பட வேண்டுமென கடந்த செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபை தீர்மானமொன்றை நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

லெபனானிலிருந்து சிரியத் துருப்பினர் வாபஸ் பெறப்பட்டமை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபைக்கு கொபி அனான் அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளார்.

இந்த அறிக்கை அடுத்த வாரம் விவாதத் திற்கு எடுத்துக்கொள்ளப்படுமெனத் தெரிவிக் கப்படுகின்றது. (ற-9)

## சுமாத்திராவில் நிலநடுக்கம்

இந்தோனேஷியா சுமாத்திரா தீவில் நேற்று முன்தினம் காலை மீண்டும் நிலநடுக்கம் ஏற் பட்டது. ரிக்டர் அளவில் இது 5.1 என பதிவானது.

இது குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியதாவது,

இந்தோனேஷியா சுமாத்திரா தீவின் மேற்கு கடற்கரை பகுதியில் நேற்று முன்தினம் அதி காலை 1.48மணியளவில் மீண்டும் நிலநடுக் கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5.1 எனப் பதிவானது. உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லை எனத் தெரி வித்துள்ளது. (ற)



பிரிட்டனில் தேசிய பொலிஸ் நினைவகத்தில் பிரிட்டன் ராணி எலிசபெத் உரையாற்றினார். அருகில் பிரிட்டன் பிரதமர் டோனி பிளேயர் உள்ளார்.

## ஷேர் பகதூர் துபே கைது


(காத்மண்டு)

நேபாள நாட்டு முன்னாள் பிரதமர் ஷேர் பகதூர் துபே நேற்று அதிகாலை 2 மணியள வில் கைதுசெய்யப்பட்டார்.

துபே பிரதமராக இருந்தபோது குடிநீர் திடடத்தில் மோசடி செய்ததால் இந்தக் கைது நடவடிக்கை என பொலிஸார் தெரிவித்துள் ளனர். (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# அழகுப் போட்டியில் பரிசு வென்ற நாய்



அமெரிக்காவில் டீஸ்மோ னிஸ் நகரில் உள்ள டிராக் பல் கலைக்கழகத்தின் சார்பில் 'டைபெ யூஸ்' நாய்களுக்கு அழகுப் போட்டி நடந்தது.

அமெரிக்காவில் டீஸ்மோனிங் நகரில் உள்ள டிராக் பல்கலைக் கழகத்தின் சின்னம் டைபெர்யூஸ் என்ற வகையைச் சார்ந்த நாய் ஆகும்.

இதன் முகம் பார்ப்பதற்கு மிக கோரமான முறையில் இருந்தா லும் இவை பழகுவதற்கு மிக இனி மையானதாகும்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் சார்பில் ஆண்டுதோறும் இந்த வகை நாய்களுக்கான அழகுப் போட்டி நடத்தப்படும்.

இந்த ஆண்டு 26ஆவது ஆண்டு அழகுப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியில் பங்கேற்று பரிசு வென்ற டைபெர்யூஸ் வகை நாயைப் படத்தில் காணலாம். (ற)

# திருப்பதியில் நாணய மோசடி

(திருப்பதி)

திருப்பதி உண்டியலில் சேர்ந்த நாணயங் களை வங்கியில் கட்டும்போது நடந்த ஊழலில் ரூ.16 ஆயிரம் மதிப்புள்ள இரண்டு ரூபாய் நாணயங்கள் வியாபாரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதுடன் வியாபாரியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் மற்றும் ஐந்து ரூபாய் நாணயங்கள் என திருப்பதி உண்டியலில் காணிக்கையாக செலுத்தப் படும் நாணயங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 12 கோடியை எட்டும். இப்படி வசூலாகும் நாண யங்களை அதன் மதப்புவாரியாகப் பிரித்து எண்ணிய பின்னர் சாக்கு மூட்டைகளில் கட்டி, கோயில் நிர்வாக அதிகாரிகள் மற்றும் வங்கி அதிகாரி முன்னிலையில் வாரத்திற்கு இரு முறை வங்கியில் செலுத்தப்படும்.

இவ்வாறு செலுத்தப்படும் நாணய மூட்டை களில், இரண்டு ரூபாய் நாணயங்கள் உள்ள மூடடைகளைக் கடத்திவிட்டு அதற்குப் பதிலாக ஒரு ரூபாய் நாணயங்கள் உள்ள மூட்டையை அங்கு மாற்றி வைத்துவிட்டு கோயில் வங்கிக் கணக்கில் போடப்பட்டது.

கடத்தப்பட்ட இரண்டு ரூபாய் நாணயங்கள் அடங்கிய மூட்டையை வேறு ஒரு தேசிய வங்கியில் செலுத்தி அவ்வங்கி மூலமாக இரண்டு ரூபாய் நாணயங்கள் திருப்பதியில் உளள வியாபாரிக்குப் போய்ச் சேர்ந்துள்ளது.

இந்த நாணயக் கடத்தல் ஊழலில் வங்கி மற்றும் கோயில் அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக் கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இந்த நாணயக் கடத்தல் தொடர்பாக திருப்பதியைச் சேர்ந்த வியாபாரி கைது செய்யப்பட்டார். அவர் வீட்டிலிருந்து ரூ.16 ஆயிரம் மதிப்புள்ள நாணயங் கள பிடிபட்டுள்ளன. பொலிஸ் விசாரணையில் இந்த நாணயக் கடத்தலில் தொடர்புள்ளவர் கள் பற்றிய விபரம் தெரியவரும். (ற)

## அம்பலத்துக்கு வரும்

# ஜெயலக்ஷ்மியின் மோசடிகள்

(மதுரை)

ஏட்டு முதல் எஸ்பி.வரையிலான 21 பொலிஸ அதிகாரிகள் மீது ஜெயலக்ஷ்மி கூறிய புகார் கள் குறித்து விசாரணை நடத்திய சி.பி.ஐ மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் தமது அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பாக மதுரை தலைமை நீதிபதி நடுவர் மன்றத்தில் நேற்று முன் தினம் நான்கு குற்றப்பத்திரிகைகளை சி.பி.ஐ. அதிகாரிகள் தாக்கல் செய்தனர்.

அதில் இன்ஸ்பெக்டர்கள் இளங்கோவன், மலைசாமி ஆகியோரின் உதவியுடன், மதுரை நகைக்கடையொன்றில் 16பவுண் நகை மற் றொரு கடையில் 16ஆயிரம் ரூபா, உடுமரைப் பேட்டை தனியார் வங்கியொன்றில் 53 ஆயி ரதது 500 ரூபா, வேறொரு தனியார் வங்கியில் 1 இலட்சம் ரூபா என இன்பெக்டர்கள் இளங் கோவன், மலைசாமி ஆகியோர் உதவியுடன வாங்கிய ஜெயலக்ஷ்மி அவற்றைக் கொடுக் காமல் மோசடி செய்துள்ளதாகக் குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஈரோட்டைச் சேர்ந்த சண்முக சுந்தரி என்பவரிடம் பொலிஸில் வேலை வாங் கித் தருவதாக 2 இலட்சம் ரூபா வாங்கிக் கொண்டு ஜெயலக்ஷ்மி மோசடி செய்து விட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

ஜெயலக்ஷ்மியின் மோசடி தொடர்பாக திருச்சி மற்றும் கோவை நீதிமன்றத்தில் தலா ஒரு குற்றப்பத்திரிகை அடுத்த மாதத்தில் தாக்கல செய்யப்படுமென்றும், பொலிஸ் அதிகாரிகள் மீதான பாரிய குற்றச்சாட்டுக்கள் பற்றிய அறிக்கை சமர்ப்பிக்கப்படுமென்றும் சி.பி.ஐ.அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (து)

# உயிர் தப்பிய 1000 பயணிகள்

பாகிஸ்தானில் தீவிரவாதிகள் ஒரு ரயி லுக்கு வைத்த வெடிகுண்டு முன்கூட்டியே வெடித்ததில் ஆயிரம் பயணிகள் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினர்.

பாகிஸ்தான் சிண்டு மாநிலத்தில் உள்ள கண்டுகட் பகுதியில் உள்ள ரயில் பாதை யில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் அதிக சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளைப் புதைத்து வைத்தனர்.

ஆனால், ரயில் வருவதற்கு சில நிமி டங்களுக்கு முன்பே அக்குண்டுகள் வெடித் தது.

இச்சம்பவத்தில் ரயில் தண்டவாளம் பல அடி நீளத்திற்குத் தூக்கி எறியப்பட்டது.

ரயில் வருவதற்கு முன்பே குண்டுகள் வெடித்ததால் இதனால் 1000க்கும் மேற்பட்ட பயணிகளுடன் அந்த ரயில் தப்பியது. (ற)

## உண்மையை மறைக்க முயல வேண்டாம்

# அரச வழக்கறிஞருக்கு நீதிபதிகள் கண்டனம்

(சென்னை)

சென்னை மாநகராட்சியின் இரண்டு வட் டாரங்களுக்கான இடைத்தேர்தலின் போது சாலை மறியலில் ஈடுபட்ட தமிழக அமைச்சர் களை நீதிமன்றத்துக்கு அழைத்து விசாரணை நடத்த நேருமென தமிழக அரசை சென்னை உயர் நீதிமன்றம் எச்சரித்துள்ளது.


தி.மு.க.வேட்பாளர்கள் தாக்கல் செய்திருந்த மனுமீது உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின் போது அமைச்சர்கள் சாலை மறியலில் ஈடுபட்டதை மறைக்க வேண்டா மென அரச வழக்கறிஞருக்கு நீதிபதிகள் கண்ட னம் தெரிவித்தனர். மேலும் தி.மு.கவினரின் புகார்களைச் சரிபார்த்து அவற்றைப் பதிவுசெய்ய வேண்டுமென்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இவ்வழக்கு விசாரணை தொடர்ந்து நடை பெற்ற போது அரசு தரப்பில் ஆஜுனராக கூடு தல் தலைமை வழக்கறிஞர் சோமைய ராஜுலு வாக்குச் சாவடியில் ரகளை செய்ததாக அமைச்சர் வளர்மதி மீதான தி.மு.கவினரின புகாரைப் படித்துக்காட்டி தீவிரமான குறறச் சாட்டுகள் எதுவும் அமைச்சர் மீது இல்லையென்று கூறினார். ஆனால் அவரது வாதத்தை ஏற்றுக் கொள்ளாத நீதிபதிகள் அமைச்சர் மீது உட னடியாக வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டனர்.

வாக்களிப்புத் தினத்தன்று தமிழக அமைச் சர்கள சாலை மறியலில் ஈடுபடவில்லையென அரசு வழக்கறிஞர் தொடர்ந்து வலியுறுத்தி னால் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு சம்மன் அனுப்பி நீதிமன்றத்துக்கு அழைத்து விசாரிக்க நேரிடும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

இனிவரும் தேர்தல்களில் வன்முறை நிகழாது எனத் தமிழக அரசு உறுதிமொழி அளிக்கவேண்டுமென்றும் நீதிபதிகள் வலி யுறுத்தினர். (து)

# சூரியக் குளியல்



அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் டரான்கா என்ற விலங்குகளின் பூங்காவில் மனித குரங்குகள் குளிர் தாங்க முடியாமல் சூரிய குளியலில் ஈடுபட்டன.

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் டரான்கா என்ற விலங் குகள் பூங்கா ஒன்று உள்ளது. இங்கு மனித குரங்குகளுக்காக தனி இடம் ஏற்படுத்தப்பட்டு அவை பராமரிக்கப்படுகின்றன. தற்போது இந்தப் பூங்காவில் மொத்தம் 19 மனித குரங்குகள் உள்ளன.

உலகிலேயே முதன் முறையான மனிதக் குரங்குகளுக்கு என தனி இடம் ஏற்படுத்தப்பட்டு அவை பராமரிக் கப்பட்டு வருகிறது. 1980 முதல் மனித குரங்கு கள் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த விலங்கியல் பூங்காவில் உள்ள [illegible] மனித குரங்குகள் குளிர் தாங்க முடியாமல் ஒரு பாறை மீது அமர்ந்து [illegible] குளியல் நடத்திய காட்சி. இங்கு [illegible] குரங்குகள் வளர்க்கப்பட்டு இனவிருத்தி [illegible] செய்யப் படுகிறது. (ற)




# நலமான வாழ்க்கை வாழ்வது எப்படி?

நல்வாழ்வு வாழ்வதற்கு ஆரோக்கியம் இன்றியமையாதது ஆகும். உடல் நலமாக இருந்தால் தான் மனமகிழ்ச்சி உண்டாக வாய்ப்புண்டு. சிலர் தங்களுக்கு எவ்வளவு வசதியிருந்தாலும் மனதில் ஆனந்தமோ, மகிழ்ச்சியோ இல்லாமலிருப்பர். அதேசமயம், வசதிக்குறைவான சிலர் மகிழ்ச்சியுடன் இருப்பதையும் நாம் காணலாம். இதை உற்றுநோக்கினால், மகிழ்ச்சியான வாழ்வு வாழ்வதற்கு உடல் ஆரோக்கியமும், நோயற்ற வாழ்க்கையும் இன்றியமையாதவையாகத் தென்படும்.

உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் அவசியமானது உணவு. அதேசமயம் உடல் நலன் பாதிக்கப்படுவதும் சத்துள்ள, சுகாதாரமான, சுத்தமான, தேவையான அளவு உணவை உட்கொள்ளாமையினால்தான். உடல் வளர்ச்சிக்கு நாம் உண்ணும் உணவில் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும்.

மேலும் உடல் வலிமை நிரந்தரமானது அல்ல. வயது ஆக ஆக உடல் வளம் குறைந்து விடுகின்றது. உண்ணும் உணவும் நல்ல பழக்கவழக்கங்களும்தான் மனிதனை நீண்ட நாட்கள் வாழ வைக்கிறது.

இன்றைய உலகில், நோய்கள் அதிகரித்து விட்டன. விஞ்ஞானமும் அறிவியல் ஆராய்ச்சிகளும் எந்த அளவுக்கு முன்னேறிக் கொண்டு வருகின்றனவோ அந்த ளவுக்கு நோய்களின் எண்ணிக்கையும் கூடிக்கொண்டே போகின்றன. மனிதன் இயந்திரமாக இயங்குகின்றான். வாழ்க்கை முறை மாற்றம், உடலுக்குதவாத உணவுப் பழக்கங்கள், உடல் நலத்தில் அக்கறை கொள்ளாதது இவை அனைத்தும் ஆரோக்கியத்தை பாதிக்கச் செய்கின்றது.

மேலும், அழுக்கு, அசுத்தம், தூய்மையின்மை ஆகியவைகளே நோய்கள் வருவதற்கு ஏதுவாக அமைகின்றன. ஆகையால் சுகாதாரமான உணவை உட்கொள்வதோடு, உடலையும் அவ்வாறே தூய்மையாக வைத்துக்கொள்வது மிகவும் அவசியம். ஆகாரம் சுத்தமாக இருந்தால் மனதும் சுத்தமாக இருக்கும்.



நாவை சுவைக்கு எளிமைப்படுத்தியிருப்பது, மற்றும் நாவிற்கு அடிமையாகாமலிருப்பது, உடலுக்கேற்ற உணவை உட்கொள்வது இவை அனைத்தும் உடலை நல்ல முறையில் வைத்துக்கொள்ள உதவும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பதை அனைவரும் உணர வேண்டும். தேவையான உணவை போதிய அளவு உட்கொள்ள வேண்டும். உயிர் வாழத்தான் உணவு, உணவுககாக நாம் உயர் வாழவில்லை எனபதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

வாழும் வாழ்க்கை ஆரோக்கியமானதாக இருத்தல் அவசியம். வாழ்க்கை வாழ்வதற்கே என்றாலும், இப்படித்தான் வாழவேண்டும் என்று ஒரு வரைமுறையை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றிருந்தால், இறுதியில் அது தீய விளைவையே ஏற்படுத்தும்.

உடலை நல்லமுறையில் பராமரித்தல் வேண்டும். ஆரோக்கியமான சிந்தனையும், ஆரோக்கியமான நடத்தையும் உடலுக்கு நன்மையையே அளிக்கும். ஆரோக்கியமான நடத்தை என்றால் என்ன? தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகாமல் இருப்பதே ஆரோக்கியமான நடத்தை எனப்படும். அதாவது நற்செயல்களையே செய்து வருவதன் மூலம் நாம் நம்மைக் காத்துக்கொள்ள முடியும்.

அவற்றோடு தினசரி தேகப் பயிற்சி, யோக பயிற்சி, அவவப்போது விரதம், உபவாசம் நம் உடல் நலத்திற்கு இன்றியமையாதது ஆகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

நோய் கொண்ட செல்வந்தன் ஒருவனுக்கு அவன் சேர்த்துவைத்துள்ள சொத்துக்களால் எப்பயனும் இல்லை. அவன் அதைக் கொண்டு சுகமாக வாழவும் இயலாது. ஒருவன் சொத்துக்களைச் சேர்ப்பதறகும் அவனுக்கு நோயற்ற ஆரோக்கியமான உடல் வளம் தேவையல்லவா?

ஆகையால், வருமுன் காத்தல் வந்தபின் வருந்துவதை விட மேலானதல்லவா?

# நீலநிறக் குழந்தை பிறப்பது ஏதனால்?

குழந்தைகளுக்கு வரும் பிறவி இருதய நோய்களில் மிகவும் சிக்கலானது குழந்தை நீல நிறமாக மாறும் 'புளூ பேபி சிண்ட்ரோம்'. பிறந்தது முதல் ஒரு மாதம் வரை உள்ள பச்சிளங் குழந்தைகளுக்கு இந்த நோய் வருகிறது.

**நோய்க்கான அறிகுறிகள:**

இருதய உறுப்புக்களான வால்வுகள், தடுப்பு சுவர்களில் நோய்ப் பாதிப்பின் தன்மைக்கு ஏற்ப அறிகுறிகள் தெரியும். சில குழந்தைகள் பிறக்கும்போதே நீல நிறமாகப் பிறக்கும். உடலில் அதிகளவு கார்பன்டை ஒக்சைடு இருந்தால் இதுபோலப் பிரச்சினை வரும்.


கார்பன்டை ஒக்சைடு அதிகமாகும்போது இரத்தத்தில் அமிலத்தன்மை அதிகமாகும். சுவாச மண்டலத்தைக் கட்டுப்படுத்தும் மூளை நரம்புகள் வேகமாகச் செயல்பட்டு சாதாரணமாக மூச்சு விடும் நிலை அதிகமாகி ஒரு நமிடத்திற்கு 18,20 முறை இதயத் துடிப்பும் அதிகமாகி மூச்சிரைப்பு ஏற்படும். இதுபோன்ற குழந்தைகளுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை செய்யவேண்டும். இல்லாவிட்டால் குழந்தை இறக்கும் நிலையும் ஏற்படலாம்.

இவ்வாறான குழந்தைகளுக்கு டாக்டர்கள் முதலில் செயற்கை பிராணவாயு கொடுத்து 'இன்டெரால்' என்ற மருநதைக் கொடுக்கிறார்கள். இரத்தத்தில் இருக்கும் அமிலத்தன்மையைக் குறைக்க 'பைகார்பனேட் மருந்தைக் கொடுக்கிறார்கள். மருத்துவ சிகிச்சைக்கு கட்டுப்படாமல் அடிக்கடி மூச்சிரைப்பு, அதிகப்படியான இருதயத் துடிப்பு ஏற்பட்டால் அறுவை சிகிச்சை செய்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் ஒரு வயதிற்கு முன் அறுவை சிகிச்சை செய்தால், இரண்டு சதவீதம் தான் வெற்றி வாய்ப்பு இருக்கிறது.

உலகளவில், பிறக்கும் 100 கோடி குழந்தைகளில் ஆயிரம் குழந்தைகள் 'புளூ பேபி'யாக பிறக்கின்றனர். இதில் 50 சதவத குழந்தைகள் மட்டுமே முறையான சிகிச்சை கிடைத்து உயிர் வாழ்கின்றனர்.

நீல நிற இருதய நோயிலும பல வகைகள் உள்ளன. 85 சதவீத குழந்தைகளுக்கு வருவது 'டெட்டாலஜி பேலோஸ்' என்ற வகை. அடுத்து 'பல்மனரி அட்ரீசியா'. இதில் இருதயத்தின் வலது கீழறையில் இருந்து அசுத்த இரத்தத்தை எடுத்துச் செல்லும் பல்மனரி வால்வு சுருங்கி தமனியோடு ஒட்டிக் கொள்ளும். இது பிறவியிலேயே உருவாகும் குறை. இதனால் வலது கீழறையில் இருக்கும் அசுத்த இரத்தம் இரண்டு கீழறைக்கும் இடையில் இருக்கும் தடுப்புச் சுவரில் ஏற்படும் ஓட்டை வழியாக இடது கீழறைக்கு வந்துவிடும்.

மூன்றாவது வகை 'டிரைகஸ் அட்ரீசியா'. வலது மேலறைககும், கீழறைக்கும் இடையில் இருக்கும் வால்வுக்கு பெயர் 'டிரைகஸ்பி'. இந்த வால்வு முழுமையாக உருவாகாமல் இருககும். இதனால் வலது மேலறையில் உள்ள அசுத்த இரததம் கீழறைக்கு வராது.



இதனால் வலது மேலறைக்கும் இடது மேலறைக்கும் இடையில் உள்ள தடுப்புச் சுவரில் பெரிய ஓட்டை உண்டாகி, இந்த ஓட்டை மூலம் வலது மேலறை அசுத்த இரத்தம் இடது மேலறைக்கு வந்து அங்கிருந்து சுத்த இரத்தம் இருக்கும் இடது கீழறைக்கு வந்து (இதில் சுதத இரத்தம் மட்டுமே இருக்க வேண்டும) சுத்த இரத்தத்துடன கலந்து, உடல் முழுவதும் பரவ' ஊதா நிறத் தோற்றத்தைத் தருகிறது.

இதுதவிர, மிக சிக்கலான பிறவி இருதய நோய்களான 'டிரான்ஸ்பொசிஷன் டீ' மற்றும் 'எல்' ஆகிய பிறவி நீல நிற இருதய நோய்கள் உண்டாகின்றன. இதில் இருதய உறுப்புக்களான தமனி, இருதய அறைகள் போனறவை இயற்கையாக இருக்கும் இடத்திலிருந்து மாறி, வேறு இடங்களில் இருக்கும். சிலவேளைகளில் இடது புறம் இருக்கவேண்டிய இருதயம் வலது புறமாக இருப்பதும் உண்டு.

இடது கீழறை இல்லாமல் இருப்பது, மகாதமனி சிறுத்துப் போவது, மகாதமனியே இல்லாமல் இருப்பது போன்ற குறைகளும் ஏற்படும் 'ஈ.சி.ஜி., எக்ஸ்ரே, எக்கோ கார்டியோகிராம்' என்ற நவீன ஒலி அலை வரைபடம் போன்ற பரிசோதனைகள் மூலம் இநத குறைபாடுகளை எளிதாகக் கண்டுபிடிக்க முடியும் எனடாக்டர்கள் தெரிவிக்கினறனர். இந்தப் பரிசோதனைகளில கண்டுபிடிக்க முடியாவிட்டால் 'ஆஞ்யோகிராம்' செய்யவேண்டும்.

குழந்தைகளுக்கு பிறவியிலேயே வால்வுகளில் ஏற்படும் கோளாறுகளால் நீல நிறமற்ற இருதய நோய்களான, மேலறை தடுப்புச் சுவரில் ஓட்டை ஏற்படுகின்றது. அதேபோல கீழறை சுவர்களில் ஓட்டை ஏற்படுவது உட்பட பல பிறவி இருதய நோய்கள் குழந்தைகளுக்கு வருகிறது.

ஒரு வயதில் இருந்து 12 வயதிற்குள் நோய் தாக்கிய 80 சதவீதம் குழந்தைகளின் குறைபாடுகளைக் கண்டுபிடித்துவிட முடியும. சிலருக்கு 30,40 வயது வரை கண்டுபிடிக்க முடியாமல் இருந்து அதன்பிறகு தெரியும்.

பச்சிளங் குழந்தைகள் பால் சரியாக குடிக்காமல் போனால் அல்லது பால் குடிக்கும் போது அடிக்கடி வழக்கத்திற்கு மாறாக புரை ஏறினால், மூக்கில் வழிந்தால் உடனடியாகக் கவனிக்க வேண்டும். இது பிறவி இருதய நோய்களின் அறிகுறிகளாகவும் இருக்கலாம். கவனிக்காமல் விட்டால் நுரையீரலுக்குள் பால் சென்று 'நிமோனியா' போன்ற வியாதிகளை உண்டாக்கும்.

வால்வில் ஏதாவது பிரச்சினை இருந்தால் படபடப்பு, மயக்கம், அடிக்கடி சளி, இருமல் போன்ற அறிகுறிகள் தெரியும். எதுவாக இருந்தாலும் குழந்தையின் உடல் மாற்றங்களைக் கவனத்துடன் பார்த்து, சந்தேகம் இருந்தால் உடனடியாக டாக்டரிடம் காட்டி ஆலோசனை பெறுவது மிகவும் முக்கியம்.

## சமைத்துச் சுவைப்போம்

### கரட் அல்வா

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| கரட் – | 1/4kg |
| சீனி – | 1/2kg |
| நெய் – | 400g |
| முந்திரிப்பருப்பு – | 75g |
| கோதுமை மா – | தேவையானளவு |
| வனிலா, எஸன்ஸ் – | சிறிதளவு |
| தேங்காய்ப் பால் – | 1/4கப் |

***செய்முறை:***

கரட்டை மென்மையாகத் துருவி எடுத்துக்கொள்ளவும். துருவிய கரட்டை கொஞ்சம் பால் சேர்த்து வேக விடவேண்டும். வெந்ததும் நன்கு மசித்து மாவுடன் கரைத்துக் கொள்ளவும். சீனியைப் பாகுபோல் காய்ச்சி இந்தக் கலவையுடன் கலந்து கைபடாமல் கிளிறி விடவும்.

கலவை சற்று கெட்டியாக வந்தவுடன் நெய் சேர்த்து மறுபடியும் கிளறவும். கரட் சுருண்டு அல்வா பதத்திற்கு வந்து நெய் கசியத் தொடங்கியதும் அதனுடன் முந்திரிப் பருப்பு, வனிலா, எஸன்ஸ் சில துளிகள் விட்டு இறக்கி வைக்கவும். கரட் அல்வா தயார். சாப்பிடுவதற்கு மிகவும் ருசியாக இருக்கும்.

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்வேூர் பகைவர் தொடர்பு - குறள்.

வலம்புரி

# நெருக்கடிக்குள் அரசாங்கம்

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் ஆட்சிக்கு பெரும் நெருக்கடியும் சோதனையும் ஏற்பட்டிருக்கிறது.

புதுவருட விடுமுறையை லண்டனில் கழித்துவிட்டு நாடு திரும்பிய கையோடு ஜனாதிபதிக்கு நெருக்கடியும் ஆரம்பித்திருக்கிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் ஆழிப்பேரலை மீள்கட்டுமானத்துக்கும் இலங்கையின் சமாதானத்துக்கும் ஆதாரமூலமாக அமையும் பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்பது அரசின் முன்வைக்கப்பட்டுள்ள முதன்நிலை விடயம். இந்த நெருக்கடி குறித்து முடிபு எடுக்குமுன் அடுத்த நெருக்கடி தலைதூக்கியிருக்கிறது.

அது அரச இயந்திரத்தை நகர்த்திச் செல்ல அச்சாணியாக இருக்கும் ஜே.வி.பியின் பிரச்சினை. பொதுக்கட்டமைப்பை உருவாக்கினால் ஆட்சிக்கான ஆதரவை விலக்குவோம் என்ற கோதாவில் ஜே.வி.பியின் நெருக்கடி உச்சத்தையடைந்திருக்கிறது.

அடுத்த பக்கத்தால் மேல் மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட்கூரே விவகாரம் சபையின் மூன்று வார காலத்திற்கு சொல்லாமல் கொள்ளாமல் ஒத்திவைக்கவேண்டிய நெருக்கடியை உருவாக்கியிருக்கிறது.

மேலும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரமும் நடவடிக்கையும் ஜனாதிபதியை கடுப்பேற்றியிருப்பதுடன் என்ன செய்வது என்ற உபாயம் புரியாமல் திகைக்க வைத்திருக்கிறது. இதற்கெல்லாம் மேலாக வெண்ணெய் திரண்டுவரும் வேளையில் தாழி உடைந்த கதையாக ஆழிப்பேரலை அனர்த்த மீள்கட்டுமானத்திற்கு உதவிகள் வந்துசேர இருக்கும் நிலையில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் தான் சர்வதேச உதவிகள் சாத்தியமாகும் என்ற சர்வதேச அழுத்தம் ஜனாதிபதியை புதிய நெருக்கடிக்குள் தள்ளி விட்டிருக்கிறது.

இதனைவிட இனவாதிகளின் கூச்சல் மற்றும் எதிர்ப்பு முஸ்தீபுகள் எல்லாம் ஆட்சிக்கு எதிராக கூட்டாக தலையெடுத்திருக்கின்றமையும் ஜனாதிபதியை குடையத் தொடங்கியுள்ளது.

இந்த வகையில் எத்தகைய நெருக்கடியான முடிச்சுக்களையெல்லாம் ஜனாதிபதி எவ்வாறு அவிழ்க்கப்போகிறார் என்பதில் தான் அரசியல் விறுவிறுப்பே அடங்கியிருக்கிறது.

முதலாவது நெருக்கடிக்கு தீர்வாக பொதுக்கட்டமைப்பை உருவாக்க ஜனாதிபதி முனைவாரேயானால் ஜே.வி.பியின் நெருக்கடி உச்சமடையும். இவ் உச்சம் ஜனாதிபதியின் ஆட்சிக்கு அச்சத்தை ஏற்படுத்தும்.

ஜே.வி.பியின் எதிர்ப்பையும் மீறி பொதுக்கட்டமைப்பை உருவாக்க ஜனாதிபதி முற்பட்டால் ஜனாதிபதியின் ஆட்சியே அஸ்தமனமாகும். ஜே.வி.பி. அரசிலிருந்து வெளியேறி இனவாத ரீதியில் தனது செயல்பாட்டுக்கு புகழாரம் சூட்டி, இனவாதிகள் மத்தியில் தனது ஆதரவை உயர்த்திக்கொள்ளும்.

இதனால் பொதுக்கட்டமைப்பை உருவாக்கி ஆட்சியைக் கலைப்பதா? அல்லது ஆட்சியைக் காப்பாற்ற பொதுக்கட்டமைப்பை பொதுவாக காலம் கடத்துவதா? என்ற நெருக்கடி ஒருபுறம் இருக்க,

மறுபுறத்தில் பொதுக்கட்டமைப்பை உருவாக்காவிட்டால் கிடைக்கப்போகும் பெரும் சர்வதேச உதவியை சந்திரிகாவின் அரசு இழந்துவிடும். அது மாத்திரமன்றி இதுவரை காலமும் சர்வதேச உதவியை பெற்றுக்கொள்ளவே அரசாங்கம் கபட நாடகம் ஆடியது என்ற உண்மையும் அரசுத் தலைவி சந்திரிகாவின் இரட்டை வேடமும் சர்வதேசத்திற்கு அம்பலமாகிவிடும்.

இதேவேளை சர்வதேசத்தின் நன்மதிப்பைப் பெறவும் உதவியை அள்ளிக்கொள்ளவும் என பொதுக்கட்டமைப்பை உருவாக்கினால் ஜே.வி.பியால் ஆட்சியே போகும். இத்தனை நெருக்கடிகள் பிரச்சினைகள் மத்தியில் ஆட்சிக்கு எதிராக கிளம்பியிருக்கும் கட்சிச் சிக்கல்கள், அரசியல் முரண்பாட்டுப் பிணக்குகள், எதிர்க்கட்சியின் பலமும் தாக்கமும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை பெரும் நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது. நாட்டின் தலைவி - அரசின் தலைவி - நிறைவேற்று அதிகாரம் பொருந்தியவர் என்ற வகையில் ஜனாதிபதியே நாட்டில் அதி பொறுப்பு மிக்கவர் என்ற அடிப்படையிலும், இதற்கெல்லாம் ஜனாதிபதி என்ன தீர்வை எடுக்கப் போகிறார்.

# கொழும்பு, வட- கிழக்கில் பணிபுரியும் இராணுவ, பொலிஸ் புலனாய்வு அதிகாரிகளுக்கு அரசாங்கம் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்

## ஹெல உறுமய வேண்டுகோள்

(கொழும்பு)

கொழும்பிலும் வடக்கிலும் பணிபுரியும் இராணுவ, பொலிஸ புலனாய்வு அதிகாரிகளுக்குப போதியளவு பாதுகாப்பை வழங்குமாறு ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்திற்கு எதிராகப் பணிபுரியும் அதிகாரிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் பாதுகாப்பு வழங்க அரசு தவறியுள்ளது என ஜாதிக ஹெல உறுமய பிரதிசெயலர் கொட்டகதெனிய தெரிவித்தார். கடதத்தப்பட்ட ஜெயரட்ணம் தொடர்பாகவே இவர் இக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

கொட்டகதெனிய இது விடயத்தில் மேலும் தெரிவிக்கையில்,

1995-2002 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பிரதி இன்ஸ்பெக்டராக நான் இருக்கையில், ஜெயரட்ணத்தை ஏ.எஸ்.பியாக பதவி உயர்த்த இரு தடவை முயன்றும் முடியாமல் போய்விட்டது என்றார்.

மேலும் புலிகள் தற்போது கொழும்பில் முழுநேரமாக செயற்பட்டு வருகின்றனர். குறிப்பாக தென்மாகாணம் மற்றும் மேல் மாகாணத்திலும் கூட இதனைத் தடுக்க அரசாங்கத்தால் முடியவில்லைஇ இதுபற்றி நோர்வே அனுசரணையாளர்களிடம் முறையிட மட்டுமே அரசாங்கத்தால் முடியும்.

ஜெயரட்ணத்தை விடுவிக்க அரசாங்கம் தம்மாலான அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டும். அதேபோல் புலிகளின் பட்டியலில் உள்ள இர்ாணுவ, பொலிஸாருக்கும் போதிய பாதுகாப்பை வழங்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (ந-4,6)

# இயற்கை அனர்த்தம் குறித்து முற்கூட்டியே அறிவிக்கப்படும்

## வதந்திகளால் குழப்பமடையத் தேவையில்லை

(கொழும்பு)

மீணடும் கடல் பெருக்கெடுக்கக் கூடும் என்ற வதந்திகள் பற்றி அநாவசியமாக யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று வளிமண்டலவியல் திணைக்களமும், புவிச்சரிதவியல் ஆய்வுப் பணியகமும் அறிவித்துள்ளன.

ஒரு சில ஊடகங்களில் தற்போதைய காலநிலை பற்றிய தகவல்களுக்கு தவறான அர்த்தம் கற்பிக்கின்றன. இதனால் கரையோரப் பிரதேசங்களில் உள்ள மக்கள் வீணான அச்சத்துடன வாழ்ந்து வருவதாக புவச்சரிதவியல்,சுரங்க ஆய்வுப்பணியகத்தின் பணிப்பாளர் சரத்கீர வர்ணகுல தெரிவித்தார்.

பௌர்ணமியில் ஏற்படும் ஊற்றுப் பெருக்கு காரணமாக கடல் அலைகள் மேலெழுவது வழமையான இயற்கை நிகழ் வாகும்.

இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக சுனாமி அனர்த்த எச்சரிக்கை நிலையத்துடன் தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணி வருகின்றது.

கடந்த மூன்றாம் திகதி தொடக்கம் எட்டாம் திகதி வரை பிரானஸ் தலைநகரில் நடந்த சுனாமி அனர்த்தம் குறித்த மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இம் மாநாட்டில் எதிர்காலத்தில் நிகழக்கூடிய பூமியதிர்ச்சிகள், பூகம்பப் பேரலைகள் அகியவற்றை முற்கூட்டியே அறிந்து கொள்ளும் நவீன உபகரணங்களை கடலுக்கடியில் பொருத்தவிருப்பதாக யுனெஸ்கோ அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

இந்துமா சமுத்திரக் கடற்பரப்பில் பேரலைகள் ஏற்படுமானால் சகல தேச சமூகத்தின் உதவியுடன் முன்கூட்டியே எச்சரிக்கை செய்ய முடியும். எனவே யாரும் வதந்திகளால் குழப்பமடையத தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-4)

# தோழியை திருமணம் செய்வதற்காக சிகிச்சை மூலம் ஆணாக மாறிய பெண்!

## இறுதிநேரத்தில் கணவராக ஏற்க மறுத்ததால் பெரும் ஏமாற்றம்

தோழியைத் திருமணம் செய்வதற்காக மருத்துவ சிகிச்சை மூலம் ஆணாக மாறிய பெண்ணை தோழி இறுதி நேரத்தில் நிராகரித்த சம்பவம் கேரள மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி தெரியவருவதாவது,

கேரளா மாநிலம் பாலா என்ற இடத்தைச் சேர்ந்த குட்டியம்மாள் (வயது-33) என்ற இந்தப் பெண் இறப்பர் மரத்தில் பால் வெட்டும் தொழிலாளியாக வேலை பார்த்து வருகிறார்.

இவரது வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் ஒரு பெண் வசித்து வருகிறார். இவர்கள் இருவரும் உயிருக்கு உயிரான தோழியாகப் பழகி வந்தனர்.

கடந்த 15 ஆண்டு காலமாக இவர்கள் ஒருவர் மீது ஒருவர் மாறாத அன்புடன் பேசிப் பழகி வந்தனர். குட்டியம்மாள் தான் ஆணாக மாறச் சம்மதம் தெரிவித்தார்.

இதற்குத் தோழியும் பச்சைக்கொடி காட்டினாள். அவ்வாறு ஆணாக மாறினால் உன்னைக் கரம்பிடித்து மகிழ்ச்சியுடன் வாழ்வேன் என்று குட்டியம்மாளிடம் தோழி கூறினாள்.

குட்டியம்மாள் ஆணாக மாற மருத்துவ ரீதியாக ஆலோசனை பெற்றார். அப்போது சத்திரசிகிச்சை செய்து கொள்ள வேண்டும் என யோசனை கூறப்பட்டது.

குட்டியம்மாளும் சத்திரசிகிச்சைக்காக பணம் சேமிக்கத் தொடங்கினாள். கடந்த 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம எர்ணாகுளத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அவருக்குச் சிகிச்சை தொடங்கியது. அது முழுமையான வெற்றியைக் கொடுத்தது.

இதுபற்றித் தெரிந்ததும் குட்டியம்மாள் ஆனந்தம் அடைநதார்.

ஆணாக மாறிவிட்ட குட்டியம்மாள் தோழியைக் கரம்பிடிக்க எண்ணி தனது எண்ணத்தைத் தோழியிடம் தெரிவிததார்.

தோழியின் விருப்பத்துக்காகக் காத்திருந்தார். ஆணாக மாறியதும் தனது பெயரையும் பினு என மாற்றிக் கொண்டார்.

தோழியின் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் பினு, ஆனால் தோழியிடம் இருந்து எவ்வித பதிலும் வரவில்லை.

நாளடைவில் பினுவை கணவராக ஏற்க தான் தயாராக இல்லை என்பதைத் தோழி தெளிவுபடுத்தினார்.

உனது விருப்பத்தின்படி தான் நான் ஆணாக மாறியிருக்கின்றேன் என்றும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் திருமணம் செய்ய மறுப்பது நியாயம் தானா? என்று பினு கேட்டார்.

எனினும் தோழி சம்மதிக்கவில்லை. இதனால் மனம் நொந்த பினு தனது தோழி மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

அவர் பொலிஸ் உயர் அதிகாரிகளைச் சந்தித்து நேரில் சென்று புகார் செய்தார்.

தோழியின் பேச்சை உண்மை என்று நம்பி நான் ஆணாக மாற சிகிச்சைக்காக ரூபா 50 ஆயிரம வரை செலவிட்டேன் என்று முறையிட்டார். தோழியைத் திருமணம் செய்ய தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பினு கேட்டுக் கொண்டார். இந்த விசித்திர புகார் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றார்கள். (க)


## சாயி அருளமுதம்



எனக்குள் என்னென்ன எண்ணங்கள் எழுகின்றனவோ அவை யாவும் உலக சமாதானத்துக்காகவும், உலக நன்மைக்காகவும், இளைஞர்களின் முன்னேற்றத்துக்காகவும் அத்துடன் மற்றவர்களுக்கு வழிகாட்டக் கூடிய இலட்சிய இளைஞர்களையும் பெண்களையும் உருவாக்குவதற்குமேயாம். 'சாயி கோட்பாடு' என்னும் போது அதில் அகங்காரத்தின் தூண்டுதல் கிடையாது என்பதை மனதில் கொண்டு உலக மக்களுக்கு உற்சாகமாகச் சேவையாற்றுவதற்கு உங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

# இராணுவப் புலனாய்வு அதிகாரி ம.உ. ஆணைக் குழுவால் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.இராணுவப் புலனாய்வுப் பொறுப்பதிகாரி சண்கப்புகமவை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி ரூவான் சந்திரசேகர நேற்று மனித உரிமைகள் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

உரும்பிராயைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி சர்வானந் (வயது 24) என்பவரை கடந்த ஜனவரி 29ம் திகதியில் இருந்து காணவில்லை என அவரது தாயார் சரோஜினி, இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் 05.02.2005 அன்று முறைப்பாடு செய்திருந்தார்.

அம்முறைப்பாட்டில் தனது மகனை இராணுவப்புலனாய்வு பிரிவினரே கைதுசெய்ததாக அவர் தெரிவித்திருந்தார். இதையடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி ரூவான் சந்திரசேகர பலவிசாரணைகளை மேற்கொண்ட பின்னர் யாழ்.இராணுவ புலனாய்வு பொறுப்பதிகாரி சன்கப்புகமவை நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு அழைத்து முறைப்பாடு செய்த தாயார் முன்னிலையில் விசாரணை செய்தார்.

இதன்போது இராணுவப்புலனாய்வுப்பிரிவினர் அவரது மகனை கைதுசெய்யவில்லை என புலனாய்வு அதிகாரி தெரிவித்தார். எனினும் அத்தாயார் தனது மகனை இராணுவ புலனாய்வுப் பிரிவினரே கைதுசெய்ததாக உறுதிபடத்தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் உயர்மட்ட கடும் விசாரணைகள் நடத்தப்படுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி ரூவான் சந்திரசேகரா தெரிவித்துள்ளார். இவ்விளைஞன் கடந்த 1999ம் ஆண்டும் இவரது தாயாரும், தந்தையாரும் 2000ம் ஆண்டு இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச.19)

# நள்ளிரவில் வீடு புகுந்து 30 பவுண் நகைகள் திருட்டு

(கோண்டாவில்)

யாழ்.சென்ஜோன்ஸ் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையிலுள்ள மருதடிலேனில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவு திருட்டு இடம்பெற்றுள்ளது.

அங்கிருந்த 30பவுண் நகைகளும் குறிப்பிடப்பட்ட தொகைப்பணமும் திருடர்களால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

அத்துடன் அங்கு வளர்க்கப்பட்ட பொமேரியன் இன நாய்க்குட்டியும் திருடப்பட்டுள்ளது. சிவதாசன் என்பவருடைய வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்திலிருந்த சமயம் யன்னல் கம்பிகளை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த நகைகளைத்திருடிச் சென்றுள்ளனர்.இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.(ச.130)

# சார்க் அமைப்பின் செயலாளர் நேற்று ஜனாதிபதியுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள சார்க் அமைப்பின் செயலாளர் நாயகம் சின் கொயாப்டோஜ் ஜனாதிபதியைச்சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பின்போது சார்க் அமைப்பின் 13வது மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளமை மீண்டும் அதனை நடாத்துவது தொடர்பான விடயங்களைப்பற்றி கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12வது சார்க் மாநாட்டின் பின்னர் தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்புக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சார்க் அமைப்பின் இரண்டு தசாப்தங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மூன்றாவது தசாப்தத்தின் எதிர்கால திட்டங்கள் குறித்தும் செயலாளர் நாயகம் ஜனாதிபதிக்கு விளக்கியுள்ளார்.

மற்றும் இலங்கையில் நிறுவப்படவிருக்கும் சார்க் அமைப்பின் கலாசார மையம் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

# பிரான்ஸ் மருத்துவக்குழு யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

பிரான்ஸ் பல்கலைக்கழக மருத்துவர் டாக்டர் டொமினிக்றூகட் தலைமையிலான நான்கு பேர் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலையில் பொருத்தப்படவுள்ள 'கோபால்ற்' யுனிற் உபகரணங்கள் தொடர்பான வேலைகளை திட்டமிடும் நோக்குடன் அவர்கள் யாழ்.வந்துள்ளனர்.

நேற்று காலை யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ரவிராஜ்யை சந்தித்து கலந்துரையாடியதோடு யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் புற்றுநோய்ப்பிரிவையும் சென்று பார்வையிட்டனர்.

பின்னர் இக்குழு தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்குச்சென்று வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்தனர்.(ச-19)

## பூப்பந்தாட்டப் போட்டி

(பொன்னாலை)

யாழ்.கல்வி வலயப்பாடசாலைகளுக்கு இடையிலான 19வயது பிரிவு ஆண், பெண்களுக்கான பூப்பந்தாட்டப் போட்டி இன்று சுண்டுக்குளி மகளிர்கல்லூரி பூப்பந்தாட்ட திடலில் காலை 8.30மணிக்கு நடைபெறவுள்ளது.

பெண்களுக்கான போட்டி காலை 8.30 மணிக்கும் ஆண்களுக்கான போட்டி பி.ப ஒருமணிக்கும் இடம்பெறவுள்ளன. (க-,7,49)

## பாலின் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 1லீற்றர் பாலின் விலை மே மாதம் 1ம் திகதியில் இருந்து 6ரூபாவால் அதிகரிக்கும் என யாழ்.மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் அறிவித்துள்ளது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் 26ரூபாவாக விற்கப்படும் 1லீற்றர் பால் 32ரூபாவாக உயர்வடையவுள்ளது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் பாலின் பாவனை அதிகரித்துள்ளதாகவும் மாட்டுத்தீவனங்களின் விலை அதிகரித்துள்ளமையினாலும் விலையை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(ச-19)

## மட்டு.செங்கலடியில் ஈ.பி.டி.பி அலுவலகம் மீது துப்பாக்கிச் சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடியில் உள்ள ஈ.பி.டி.பி அலுவலகம் மீது நேற்றுக் காலை இனந்தெரியாதோர் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர். இதன்போது ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரியதாஸ் ரமேஸ் (வயது 29) என்பவரே இத்துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்துளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் வாழைச்சேனை ஈ.பி.டி.பி காரியாலயம் மீது இதே போன்று துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (இ-4)

# ரயில்-பஸ்...

இதனால் இரண்டு பக்கங்களிலும் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. குறித்தபஸ் பிழையான பக்கமாகச் சென்று ரயில்கடவைக்கு அருகில் வந்தது. அவ் பஸ்சின் நடத்துநர் போன்ற ஒருவர் கையில் புத்தகத்துடன் பஸ்சை முன்னால் வருமாறு சமிக்ஞை செய்தார். அந்தநேரத்தில் ரயில்கடவையின் காவலாளி நடத்துனருக்கு, ரயில் வருவதாகவும் பஸ்சை வரவேண்டாம் எனவும் கூறினார்.

எனினும் காவலாளியின் கூற்றுக்கு செவிசாய்க்காத பஸ் ரயில் கடவையை கடக்க முற்பட்டது. அந்நேரத்திலேயே ரயில் பஸ்சுடன் மோதியதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். வேகமாக வந்த ரயில் பஸ்சைமோதி 200 மீற்றர் தூரத்திற்கு இழுத்துச் சென்றுள்ளது.

இதன் போது பஸ்சில் பயணம் செய்தவர்களில் 35பேர் பலியாகியுள்ளனர் 60ற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்த நிலையில் குருநாகல் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக் கொழும்பு தேசியவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 30பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இறந்தவர்களின் உடல்கள் குருநாகல் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன. 60 ஆசனங்களைக் கொண்ட இவ் பஸ்சில் 70க்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இவ் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஆழ்ந்த அனுதாபத்தைதெரிவித்துள்ளார். போக்குவரத்துச் சட்டதிட்டங்களை முறையாக பின்பற்றாத தனியார் பஸ்சாரதியின் தவறினாலேயே இவ் விபத்து ஏற்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குவதற்கும், காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்குத்தேவையான சகலவசதிகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதற்கும் போக்குவரத்து மற்றும் சுகாதரஅமைச்சுகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக அதிகாரிகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் இலங்கை விமானப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, இவ் விபத்து தொடர்பாகவும் காயமடைந்தவர்கள் தொடர்பாகவும் விரைவான அறிக்கை ஒன்றினை வழங்குமாறு போக்குவரத்து அமைச்சுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் மரண சடங்கிற்காக தலா 25 ஆயிரம் ரூபா வழங்குமாறு போக்குவரத்து அமைச்சர் பீலிஸ்பெரேரா,தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் போக்குவரத்து அமைச்சர் சம்பவ இடத்தை நேரில் சென்றுபார்வையிட்டனர்.. (ச,4,8,9)

## பொது...

அமையாவிட்டால் இவர்களுக்கு எதிராகவும் வழக்குத் தொடரத் தயங்கமாட்டோம் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை பொதுக்கட்டமைப்புக்கு எதிராக கையொப்பங்களைத் திரட்டி அதனை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் நடவடிக்கை ஒன்றை இன்றுமுதல் ஆரம்பிக்கவுள்ளதாகவும், அதனையும் மீறி ஜனாதிபதி பொதுக கட்டமைப்பினை உருவாக்குவாராயின்கையெ முத்திட்டஅனை வரும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்போமென அவர் மேலும் தெரிவித்தார். (ச-04)


Twenty Fifth Death Anniversary

1929.06.23

1980.04.28



Quarter Century of Peaceful Repose In Loving Remembrance of Luther James Selvarajah

"Selvagiri"
57, Arasady Road, Jaffna

wife - Ranee
Children - Dushan, Janey

(9541)













இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.